பக்கங்கள் 16
விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 212
திங்கட்கிழமை 26 ஜூன் 2023
ஆனி 11 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# அதிகாரப் பகிர்வு விடயத்தில் கூட்டிணைந்த செயற்பாடுகள்

## அமெரிக்கா தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 26**

**தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட எதிர்காலச் செயற்பாடுகளில் இந்தியாவுடன் கூட்டிணைந்த செயற்பாடுகள் பரந்துபட்ட அளவில் முன்னெடுக்கப்படும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான நிகழ்ச்சி நிரலில் இலங்கையை தொடர்ந்தும் நிலைநிறுத்துவதில் நாம் உறுதியாக இருக்கின்றோம் - இவ்வாறு அமெரிக்கா உறுதியாகத் தெரிவித் துள்ளது.** »15

கொடிகாமத்தில் நேற்று


## ஹைஏஸ் - மினிபஸ் விபத்து 9 பேர் மருத்துவமனையில்



யாழ்., ஜூன் 26
கொடிகாமம், இராமாவிலில் நேற்று நடந்த விபத்தில் 9 பேர் காயமடைந் துள்ளனர். பயணிகள் மினி பஸ்ஸும், ஹைஏஸ் வாகனமும் நேருக்கு »15

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில்

## வீதியில் மோதத் தயாரான வன்முறைக் கும்பல் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 26
வன்முறைக் கும்பலைச் சேர்ந்த 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களிடம் இருந்து வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் யாழ்ப்பாண மாவட்ட »15

## மல்லாவியில் விபத்து இளைஞர் உயிரிழப்பு!




யாழ்., ஜூன் 26
மல்லாவியில் நேற்று மதியம் நடந்த விபத்தில் 26 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொரு இளைஞர் படுகாயமடைந்துள்ளார். வவுனியா, தேக்கவத்தையைச் சேர்ந்த »15

## குப்பை கொட்டினால் பில்லி சூனியம்?

தெறித்தோடும் 'குப்பையாளர்கள்'

யாழ்., ஜூன் 26
வீதியில் குப்பைகளைக் கொட்டுவோரால் விரக்தியடைந்த ஒருவர் எடுத்த முடிவால், அந்த வீதியில் குப்பைகளைக் »15



## மக்கள் எதிர்பார்ப்பது வேறு ஆட்சியாளர் நோக்கம் வேறு

அநுரகுமார சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 26
சட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அந்தச் சட்டங்கள் நியாயமான முறையில் நடைமுறைப் படுத்தப்படும் நாடொன்றையே மக்கள் எதிர் பார்க்கிறார்கள். எனினும் ஆட்சியாளர் »15

## மின்கட்டணத் திருத்தம்: இறுதி முடிவு 30ஆம் திகதி

கொழும்பு, ஜூன் 26
எதிர்வரும் முதலாம் திகதி முதல் மின் கட்டணங்கள் குறைக்கப்படும் என்று மின்சக்தி அமைச்சு அறிவித்திருந்த நிலையில், மின் கட்டணத் திருத் தப்பட்டியல் இலங்கை மின்சாரசபை »10

## இலங்கையுடனான உறவை பலப்படுத்த விரும்பும் சீனா

கொழும்பு, ஜூன் 26
இலங்கையுடனான உறவைப் பலப்படுத்தவும், விரிவுபடுத்தவும் சீனா தயாராக உள்ளது என்று சீனாவின் வெளிவிவகார அமைச்சர் கிங் கேங்க் தெரிவித்துள்ளார். சீனாவுக்குச் சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் »15

## தீயில் எரிந்து பெண் சாவு!

சந்தேகத்தில் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 26
தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப் பட்ட குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்த »15

மன்னாரில் விசாரணை செய்யச் சென்ற

## பொலிஸார் மீது தாக்குதல் 10 பேருக்கு விளக்கமறியல்

5 பொலிஸார் காயம்

மன்னார், ஜூன் 26
விசாரணைக்காகச் சென்ற பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் பெண்கள் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தாக்குதலுக்கு உள்ளான 5 பொலிஸார் மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர். »10

## மறுசீரமைப்புக்காக அறிவிக்கப்பட்ட வங்கி விடுமுறை

கொழும்பு, ஜூன் 26
இலங்கையில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயல் முறைக்குத் தேவையான நேரத்தைப் பெறுவதற்காகவே எதிர்வரும் ஜூன் 29 ஆம் திகதி முதல் ஜூலை 3 ஆம் திகதி வரை நீண்ட வங்கி »10

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள்!

விரைவில் பட்டியல் ரணிலிடம்

கொழும்பு, ஜூன் 26
தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய உறுப்பினர்கள் தொடர்பான அறிக்கை எதிர்வரும் சில தினங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒப்புதலுக்காக அனுப் பப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.
அண்மையில் கூடிய அரசமைப்புச்சபை, தேர் தல்கள் ஆணைக்குழுவுக்கான புதிய »15

மக்கள் மனங்களில் ஒலிக்கும் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கையில் மனிதப் புதைகுழிகள்

# சர்வதேசக் கண்காணிப்பாளர்களை அகழ்வுகளுக்காக அனுப்புங்கள்!

### பிரிட்டன் எம்.பி.க்கள் வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 26**

**இலங்கையில் மனிதப் புதைகுழிகள் அகழ்வு செய்யப்படும்போது அங்கு சர்வ தேசக் கண்காணிப்பாளர்கள் அனுப்பிவைக்கப்படவேண்டுமென பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தநாட்டு அரசாங்கத்திடமும் ஏனைய சர்வதேச நாடுகளிடமும் வலியுறுத்தியுள்ளனர்.**

சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம், இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள், காணாமற்போனோர் குடும்ப ஒன்றியம், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி நிலையம் ஆகிய 4 அமைப்புகளும் ஒன்றிணைந்து 'இலங்கையில் உள்ள மனிதப் புதைகுழிகளும், வெற்றியடையாத அகழ்வுப்பணிகளும்' என்ற தலைப்பில் விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில் செம்மணி, மாத்தளை, மன்னார், சூரியகந்த உள்ளடங்கலாக நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள மனிதப் புதைகுழிகள் குறித்தும் அவற்றை அகழ்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் தடைகள் என்பன பற்றியும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

குறிப்பாக மாத்தளை மனிதப் புதைகுழி அகழ்வின்போது முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதியுமான கோத்தாபய ராஜபக்சவால் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் குறித்து அதிர்ச்சியூட்டும் தகவல்கள் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் அந்த அறிக்கையை மேற்கோள்காட்டி பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

'இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட குடும்பங்களுடனான எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம். இலங்கையில் மனிதப் புதைகுழி அகழ்வின்போது சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் அங்கு பிரசன்னமாவதை உறுதிப்படுத்துமாறு எமது அரசாங்கத்திடமும், ஏனைய சர்வதேச நாடுகளிடமும் கோருகின்றோம்.

உண்மையை அறிந்துகொள்வதற்கான உரிமை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உள்ளது' என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)



### ரணில் அரசாங்கம்

## கோத்தாபய ராஜபக்சவை பொறுப்புக்கூறவைக்காது

### சூக்கா சுட்டிக்காட்டு

கொழும்பு. ஜூன் 26

இலங்கை அரசாங்கம், கோத்தாபய ராஜபக்சவை பொறுப்புக்கூற வைப்பது என்பது மிகவும் சாத்தியமற்ற விடயம் என சர்வதேச உண்மை நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்ற பாரதூரமான மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவது நீண்ட காலமாக நிகழ்கின்றது என்பதை மனிதப் புதைகுழிகள் குறித்த புதிய அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

அன்று தொடக்கம் இன்றுவரை ஜே.வி.பி. காலத்தில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்களோ அல்லது போரின் இறுதியில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்களோ பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. இந்த அரசாங்கம் கோத்தாபய ராஜபக்சவை பொறுப்புக்கூறச்செய்வது என்பது மிகவும் சாத்தியமற்ற விடயம். தற்போதைய அரசாங்கம் அதன் இருப்புக்காகவும் ஆதரவுக்காகவும் கோத்தாபய ராஜபக்சவுக்குக் கடமைப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் - என்றார். (ம)



## அனுமதியின்றி மணலேற்றல்: மானிப்பாயில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 26

அனுமதிப் பத்திரமின்றி மணலேற்றிச் சென்ற குற்றச்சாட்டில் டிப்பர் வாகனச் சாரதி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாயில் இரவு வேளை மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின்போது மானிப்பாய் பொலிஸாரால் இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டது. கிளிநொச்சி - ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த 43 வயதானவரே கைது செய்யப்பட்டார். சந்தேக நபருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## அரிசி முறைகேடுகளால் ரூ.650 கோடி இழப்பு!




### 'கோப்' குழுவில் தகவல்

கொழும்பு. ஜூன் 26

2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் அரிசி இறக்குமதியின்போது லங்கா சதொச நிறுவனத்துக்கு 650 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் அண்மையில் கூடிய 'கோப்' குழுக் கூட்டத்தில் பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே இந்த விடயத்தை வெளியிட்டார்.

அரசியல்வாதிகளும் ஒருகுறிப்பிட்ட பிரிவு அதிகாரிகளும் ஒன்றிணைந்து மக்களின் வரிப்பணத்தை நேர்மையற்றமுறையில் அழித்துள்ளனர்.

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ச இருந்த காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்தில் விநியோகிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. மனிதப் பாவனைக்காக இறக்குமதி செய்யப்பட்ட குறித்த அரிசி பாவனைக்கு தகுதியற்றதாகிய நிலையில் கால்நடைத் தீவனமாக மிகக் குறைந்த விலைக்கு புறக்கோட்டை சந்தைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனால் லங்கா சதொச நிறுவனத்துக்கு 650 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச-இ)

## 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' விபத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகள்

### நாடாளுமன்ற விசேட குழு கவனம்

கொழும்பு, ஜூன் 26

இலங்கைக் கடற்பரப்பில் விபத்துக்குள்ளாகி சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து குறித்து விரிவான விசாரணையை ஆரம்பிப்பதற்கு நாடாளுமன்ற விசேட குழு கவனம் செலுத்தியுள்ளது.

நாடாளுமன்ற விசேட குழுக்கூட்டம் அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் அண்மையில் கூடியது. இதன்போது குழுவின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து அடிப்படை விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பில் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு அடுத்த கட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. (ச-இ)

## மக்களின் அரசியல் உரிமைகளை தொடர்ந்து மறுக்கும் ரணில் அரசு!

கொழும்பு. ஜூன் 26

தேர்தலை நடத்தாமல் தொடர்ந்து ஆட்சியில் இருக்க ரணில் தீர்மானித்துள்ளார். மக்களின் அரசியல் உரிமைகளை ரணில் தொடர்ந்து மறுத்து வருகின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் வேண்டுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க மக்கள் வாக்கெடுப்பு ஒன்றை நடத்த ஜனாதிபதி உத்தேசித்துள்ளார். இது முறையற்றது. தமது அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்த நாட்டு மக்களுக்கு உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரரீதியில் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி, தேர்தல் ஒன்று அவசியமில்லை என்று மக்களே குறிப்பிடும் நிலையைத் தோற்றுவிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் காலத்தில் நடத்தப்பட்ட மக்கள் வாக்கெடுப்பு தொடர்பில் இன்றளவும் மக்கள் மத்தியில் கடும் விமர்சனம் காணப்படுகிறது.

ஜனாதிபதியின் முறையற்ற செயலுக்கு பொதுஜன பெரமுன பங்காளியாகுமா என்பதை மக்களுக்கு அறிவிக்க வேண்டும் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரித் திட்டங்கள்: தெரிவில் முறைகேடு!

## தோணிக்கல் மக்கள் போராட்டம்



**வவுனியா, ஜூன் 26**

**அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட நலன்புரி உதவித்திட்டத்தில் வவுனியா தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்தால் நலன்புரி உதவித்திட்டக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது. இதில் வவுனியா- தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவில் விசேட தேவைக்குட்பட்டவர்கள், முதியோர்கள், விதவைகள் உட்பட பொருளாதாரம் நலிவுற்றோரில் பலரின் பெயர்கள் உள்வாங்கப்படவில்லை.

கொடுப்பனவுக்கான பெயர் பட்டியலில் வெளிநாடுகளில் வசிப்போர் மற்றும் தனவந்தர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். எமது கிராமத்திலுள்ள பொருண்மியம் பாதிக்கப்பட்டவர்களில் 70 சதவீதமானவர்களின் பெயர்கள் உள்வாங்கப்படவில்லை.

எமது பெயர்கள் உள்ளீர்க்கப்படாமை தொடர்பில் கிராம அலுவலரிடமோ அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமோ கேட்டால், எமது கோரிக்கைகளைச் செவிமடுக்காது அசண்டையீனமாகச் செயற்படுகின்றனர்.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து முறைகேடு தொடர்பில் ஆராய்ந்து மறுபரிசீலனை மேற்கொள்ள வேண்டும்- என்றனர். (ச-18)

## வீடுபுகுந்து தாக்குதல்; நபரொருவர் படுகாயம்

கொடிகாமம், ஜூன் 26

வீடுபுகுந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் குடும்பத்தலைவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கெற்பேலி மேற்கு- மிருசுவிலில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. தாக்குதலில் மார்க்கண்டு சிவானந்தம் (வயது-36) என்பவரே படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-159)

## இன்று சீரான வானிலை

கொழும்பு, ஜூன் 26

வடமாகாணத்தில் இன்று சீரான வானிலை நிலவும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் தென்மேற்குப் பிரதேசங்களில் ஜூன் 25ஆம், 26ஆம் திகதிகளில் மழை நிலைமை சற்று அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது என அந்தத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



### பல்லாண்டுகளாகக் கிடப்பிலிருந்த

## மானிப்பாய் வீதியில் செப்பனிடல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம் , மானிப்பாய் - காரைநகர் வீதி, தற்காலிகமாக புனரமைப்புச் செய்யப்படவுள்ள நிலையில், மானிப்பாய் பொலிஸ் நிலைய சந்தியிலிருந்து ஆனைக்கோட்டை வரை காப்பெற் செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக 10 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் குறூஸ் தெரிவிக்கையில்;

வடக்கில் அதிகளவான மக்கள் பயன்படுத்தும் பிரதான வீதிகளில் ஒன்றாகக் காணப்படும் காரைநகர்- மானிப்பாய் வீதி நீண்டகாலமாக முழுமையான புனரமைப்பின்றி இருந்தது. இதுதொடர்பில் நீண்டகாலமாகப் பல தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. வீதிப் புனரமைப்புக்கு முன்பு ஓரளவேனும் பயணிக்கக் கூடிய நிலை காணப்பட்டது. ஆனால், தற்போது கைவிடப்பட்ட அரைகுறை புனரமைப்பு காரணமாக வீதி முன்பைவிட மோசமாகியுள்ளது.

இந்தநிலையில் குறித்த வீதியின் தற்காலிக புனரமைப்புக்காக 141 மில்லியன் ரூபா திட்டமிடப்பட்டுள்ள நிலையில் தற்போது 10 மில்லியன் ரூபா செலவில் முதற்கட்டப் புனரமைப்புப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலதிக நிதி கிடைக்கப்பெற்றதும் சங்கானை முதல் பொன்னாலை வரையான வீதி செப்பனிடப்படும்- என்றார். (ச-125)




மந்தி பாய்ஞ்சு கொண்டே இருக்கிறதும், தொந்தி சாய்ஞ்சு கொண்டே இருக்கிறதும் வழமைதானே. ஒரு இடத்திலயும் நிலையா நிக்காமல், எங்கெயெல்லாம் கொப்புத் தெரியுதோ அங்கையெல்லாம் பாய்ஞ்சு விளையாடுற 'குணம்' எங்களிலையும் கனபேரிட்ட இருக்கினம்.

வலிகாமம் மேற்கில இப்பிடிக் 'குணமுள்ள' ஒருத்தர் கொஞ்சக்காலமா யானையில ஏறிச் சவாரி விட்டார். அப்பிடி யானையில இருந்து கொண்டே அடுத்தமுறை வீட்டுக்குள்ள நுழையிறதுக்கும் தூண்டில் போட்டபடி இருந்தவர். எப்பிடியோ தவிசாளரையும் தன்ர பக்கம் இழுத்து வைச்சு தான் சொல்றபடி தவிசாளரைத் தாளம் போடவும் வைச்சவர். அதால தவிசாளர் தயவில தனக்கும் 'சீற்' கிடைக்கும் எண்டு அவர் நம்பிக் கொண்டிருந்தவர். ஆனால் கடைசிக் கட்டத்தில அப்பிடி வீட்டில 'சீற்' கிடைக்காது எண்டு அவருக்கு வடிவாத் தெரிஞ்சு போட்டுது. திரும்ப தன்ர ஏரியாவில யானையில வந்தாலும் வெல்ல ஏலாது எண்டதும் அவருக்குத் தெரியும்.

யானையுமில்லை, வீடுமில்லை எண்ட நிலையில அப்பிடியே குத்துவிளக்குப் பக்கமா அடிச்சார் ஒரு 'அந்தர்பல்டி'. இப்ப ஆள் குத்துவிளக்கின்ர வேட்பாளர். வீட்டுக்கட்சி கண்டபடி நடக்குது. தேசியத்தை அழிக்குது எண்டுதானே வீட்டில இருந்து வெளியில வந்தவை குத்துவிளக்கை ஏத்திவைச்சவை. ஆனால் வேட்பாளர் இல்லையெண்டதுக்காக எடுத்த இந்த 'அந்தர்பல்டி' காரர், இப்ப அந்தத் தேசியத்தையே தேசிக்காய் மாதிரி தன்ர இஷ்டப்படி உருட்டி விளையாடத் தொடங்கிட்டாராம்.

அந்த ஏரியாவில உள்ள சுடலையொண்டு கொஞ்சம் வசதியள் இல்லாமல் திருத்தவேண்டிய நிலையில இருந்திருக்கு. அதைப் புனரமைக்க வேணும் எண்டு, ஊரில இருந்து புலம்பெயர்ந்து இருக்கிறவையிட்டக் கேட்டிருந்தா அள்ளிக் குடுத்திருப்பினம். ஏனெண்டால் அந்தச் சுடலைதானே அவைக்கு கடைசிக்காலத்தில 'உரித்தான சொத்து'. ஆனால் அப்பிடி ஊர்க்காரரின்ர காசிலை சுடலையைப் புனரமைக்கிறதை விட்டிட்டு , இந்த 'அந்தர்பல்டி'காரர், ஆமிக்காரரிட்ட காசை வேண்டி, அவையைக் கொண்டு சுடலையைத் திருத்தி இருக்கிறார். அதோட ஆமிக்காரரையே கூட்டிக் கொண்டுவந்து சுடலையைத் திருத்தினதுக்கு விழாவும் வைச்சு, தன்ர நன்றிக்கடனைக் காட்டியிருக்கிறார் இந்த 'அந்தர்பல்டி'காரர். இப்பிடி இவர் தேசியத்தையே ஊறுகாய் மாதிரி வித்துக் கொண்டிருந்தால் குத்துவிளக்குக்கெல்லோ கெட்டபேர்? இப்பிடி ஆமிக்கு சாமரம் வீசுற ஆக்களை வேட்பாளரா போட்டிட்டு, தேசியத்தை காக்கிறம் எண்டு எந்த முகத்தோட சனத்திட்டப் போகமுடியும்? அதே பிரதேசசபையில உள்ள இன்னொரு சுடலையும் வெளிநாட்டில உள்ள எங்கட ஆக்களின்ர காசிலதான் திருத்துப்பட்டுக் கொண்டிருக்கு. அப்பிடி இதையும் செய்திருக்கலாமே. ஒருவேளை எங்களுக்கெல்லாம் ஆமிதான் கொள்ளி போடப் போகுது எண்டு குறியீடாக் காட்டத்தான் இப்பிடி ஆமிக்காரரை வைச்சு 'அந்தர்பல்டி'காரர் சுடலையைத் திருத்தினாரோ தெரியேலை. எதுக்கும் குத்து விளக்குக்காரரும் சனமும் , ஆளில கவனமா இருக்கிறது நல்லது.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிக்கையிடுவது மாத்திரம் கிராமஅலுவலர் பணியல்ல

## குற்றங்களைத் தடுக்கும் பொறுப்பும் அவர்களுக்குரியதே என்கிறார் மாவட்டச் செயலர்

**யாழ்ப்பாணம், ஜுன் 26**

**கிராமத்தில் நடக்கும் குற்றங்கள் தொடர்பில் அறிக்கையிடுவது மாத்திரம் கிராமஅலுவலர்களின் பணியல்ல. குற்றங்கள் நடக்கும் முன்னர் அதைத்தடுப்பது, கிராமத்தில் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகப்படுபவர்கள் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்துவது என்பனவும் கிராமஅலுவலர்களின் பணிதான் - இவ்வாறு யாழ். மாவட்டச்செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.**

யாழ். மாவட்டச்செயலகத்தில் கிராமஅலுவலர்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சந்திப்பு இடம்பெற்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இதில் பங்கேற்றிருந்தார். கிராமஅலுவலர்கள் தமது குறைகள் தொடர்பில் தெரிவித்த பின்னர் உரையாற்றுகையிலேயே மாவட்டச்செயலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராமஅலுவலர்கள் கடமை நேரத்தில் அலுவலகத்தில் இருப்பதில்லை, தமது பகுதிகளுக்கு ஒழுங்காகச் செல்வதில்லை என்று மக்களிடத்திலிருந்து முறைப்பாடுகளும் கிடைத்திருக்கின்றன. கிராமஅலுவலர்கள் அறிக்கையிடுபவர்களாக மாத்திரம் இருக்கக்கூடாது. குற்றங்கள் நடப்பதற்கு முன்னர் தடுப்பவர்களாகச் செயற்படவேண்டும்.

தீவகப் பகுதிகளில் வளர்ப்புக் கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டும் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன. அந்தப் பிரதேசத்தில் உள்ள கிராமஅலுவலர்கள் சரியான விதத்தில் செயற்பட்டால் பொலிஸாரின் உதவியுடன் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும். ஆனால் கிராமஅலுவலர்கள் சமூகப் பொறுப்புடன் செயற்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. இதை நான் சொல்வதற்குக் காரணம் உண்டு. எனது மாட்டை வெட்டியவர்கள் தொடர்பில் கிராமஅலுவலர் அறிக்கை மட்டுமே வழங்கியுள்ளார். சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது தொடர்பில் அறியாதவராய் உள்ளார். தனது ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் குற்றம் நடக்கும்போது அது தொடர்பில் ஆராய்ந்து உரிய தரப்பினருக்கு வெளிப்படுத்தும் பொறுப்பு கிராமஅலுவலருக்கு உள்ளது - என்றார். (ஒ-125)

# இ.போ.ச. சேவைக்கு புதிதாகச் சாரதிகள்!

கொழும்பு, ஜுன் 26

இலங்கைப் போக்குவரத்துச்சபைக்கு புதிதாக 520 சாரதிகள் மற்றும் 170 நடத்துநர்களை இணைத்துக்கொள்ளத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சாரதிகள் பற்றாக்குறை காரணமாக பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என்றும், சில சந்தர்ப்பங்களில் வழித்தடங்களில் பேருந்துகளின் இயக்கம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்றும் இலங்கைப் போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச்சபையில் தற்போது 800 சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். எரிசக்தி மற்றும் போக்குவரத்துக்கான துறை சார் மேற்பார்வைக் குழுவின் அண்மைய அமர்வில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை போக்குவரத்துச்சபையின் பணியாளர்கள் எண்ணிக்கை தற்போது 26 ஆயிரத்து 561 பேர் என்றும், பல்வேறு ஒழுங்குப் பிரச்சினைகளால் சில ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்படாமல் சம்பளம் வழங்கப்படுகின்றது என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, இலங்கைப் போக்குவரத்துச்சபை கடந்த ஆண்டு 485 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது. 2021 ஆம் ஆண்டு கொரோனா நெருக்கடி காரணமாக, 3 ஆயிரத்து 59 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (எ-இ)

# கனடாவில் இலங்கையருக்கு ரூ.8,170 மில்லியன் அதிர்ஷ்டம்



35 MILLION

கொழும்பு, ஜுன் 26

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர் ஒருவர் அதிர்டலாபச் சீட்டிழுப்பில் 35 மில்லியன் கனேடிய டொலரை வென்றுள்ளார்.

இலங்கை மதிப்பில் இது 8 ஆயிரத்து 170 மில்லியன் ரூபாவாகும்.

ஒன்றாரியோவில் வதியும் ஜயசிங்க என்ற இலங்கையராலேயே இந்தப் பணப்பரிசு அதிர்ஷ்டமாக வெல்லப்பட்டுள்ளது.

ஜயசிங்க கனடாவுக்குக் குடிபெயர்ந்ததன் பின்னர் அடிக்கடி லொத்தர் சீட்டு கொள்வனவு செய்பவர் எனவும் 'ஜாக்பொட்' பரிசுத் தொகை அதிகமாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் மட்டும் அவர் லொத்தர் சீட்டைக் கொள்வனவு செய்பவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# புதுக்குடியிருப்புச் சந்தை குறைபாடுகள் களைவு





புதுக்குடியிருப்பு பொதுச் சந்தையில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்காக உள்ளூராட்சி மன்றத் திணைக்கள அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் புதுக்குடியிருப்பு சந்தை வணிகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில்;

வரிவிதிக்கப்படாத மரக்கறிகள் வீதி ஓரங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் ஆடை வியாபாரங்களும் வீதியோரங்களில் இடம்பெறுகின்றமையால் புதுக்குடியிருப்பு பொதுச்சந்தைக்கான மக்களின் வருகை மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. மேலும் புதுக்குடியிருப்புச் சந்தைப் பகுதியில் நீர் தேங்கிக் காணப்படுவதால் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது எனச் சந்தை வியாபாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. இதுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சிமன்றங்களின் உதவி ஆணையாளருக்குத் தெரியப்படுத்தினோம். அதனையடுத்து கவனம் செலுத்தி தீர்வு வழங்கப்பட்டுள்ளது- என்றனர். (ச-19)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தேவையான பணம் கிடைக்கும். பணம் கேட்டு நச்சரிப்பார்கள். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**இடபம்:** முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும். பொறுமை அவசியம்.

**மிதுனம்** : காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பம் தொடர்பான ய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். பிடிவாதப் போக்கு மாறும். அலட்சியம் வேண்டாம்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும். சிறுசிறு விவாதங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம். காரியம் அனுகூலமாக முடியும்.

**சிம்மம்:** சிறுசிறு சல சலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி உண்டு.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். ஆதரவு கிடைக்கும். செலவுகளால் மகிழ்ச்சியே உண்டாகும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடிவது மகிழ்ச்சி தரும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். கடன் திரும்பக் கிடைக்கக்கூடும்.

**விருச்சிகம்** : உற்சாகமான நாள். திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையிடம் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும். உறவினர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். உறவுகளால் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியம் அனுகூலமாக முடிவதுடன் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

# ஹெரோய்னுடன் ஆசிரியர் கைது

கொழும்பு, ஜுன் 26

தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஒருவர் உயிர்கொல்லி போதைப்பொருளான ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். பொரளையில் உயர்தரப் பிரிவு மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். ஆசிரியரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 350 கிராம் ஹெரோய்னை பொலிஸார் மீட்டனர். (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மீன் வேண்டாம், தூண்டிலே தேவை!

அரசாங்கத்தின் நலன்புரிக் கொடுப்பனவுகளில் இருந்து தாம் புறக்கணிக்கப்பட்டமைக்கு எதிராக வடக்கு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் பல்லாயிரம் மக்கள் ஒன்று திரண்டு அரச திணைக்களங்களை முடக்கிப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். அன்றாடங்காய்ச்சிகளாக உள்ள தாம் நலக்புரித்திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டிய நிலையில், தனவந்தர்களையும், வசதிவாய்ப்புக்கள் படைத்தோரையும் இந்தத் திட்டத்துக்காக உள்ளீர்த்து தம்மைப் புறக்கணித்திருக்கின்றனர் என்பதே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் பலரின் ஆதங்கமாகவும் அங்கலாய்ப்பாகவும் உள்ளது. இலங்கை அரசாங்கத்தின் நலன்புரிக் கொடுப்பனவுகள், சரியான நபர்களுக்குச் சென்றடையவில்லை. வறுமையில் உள்ளவர் அதேநிலையில் நின்று உழல, தகுதியற்றவர்களுக்கே சமுர்த்தி உள்ளிட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன என்ற விடயம் சுட்டிக்காட்டப்படாத ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் இல்லை என்று சொல்லும் அளவுக்கு, மோசமான வகையில் இந்த வளப்பகிர்வு கடந்த காலத்தில் அமைந்திருந்தது. இதன் தொடர்கதையே எதிர்காலத்திலும் நிகழவுள்ளது என்பதைத் தான் இந்தப் போராட்டங்கள் கட்டியம் செய்கின்றனவே அன்றி வேறில்லை.

சமுர்த்தி உள்ளிட்ட நலன்புரித் திட்டங்கள் உண்மையில் நல்ல நோக்கத்துக்காகத்தான் கொண்டுவரப்பட்டன. வாழ்வாதாரமற்று – பொருண்மியத்தில் பின்தங்கியுள்ளவர்கள் தங்களின் சிறுகுறு கைத்தொழில்களுக்கான அல்லது பொருண்மிய மேலோங்குகைக்கான ஒரு வாய்ப்பையே இந்த நலன்புரித் திட்டங்கள் மக்களுக்கு வழங்குகின்றன. ஆனால், சமுர்த்தியைப் பெறுவோரும் வழங்குவோரும் அதன் உண்மையான நோக்கத்தை உணர்ந்ததாக இல்லை. கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதுடன் தமது கடமை முடிந்தது என்பதுதான் சமுர்த்தி வங்கிகளின் சிந்தனையாக இருக்கின்றது. அதுபோல், சமுர்த்தியைப் பெறுவோரும் தமது மாதாந்தச் செலவுக்கான ஒருபகுதிக் கொடுப்பனவாக அதைப் பார்க்கின்றனரே தவிர, அதைப்பயன்படுத்தி பொருளாதாரத்தை முன்னேற்றியதாக இல்லை. 90 வீதமான பயனர்களின் நிலை இதுதான்.


வாழ்வாதார முன்னேற்றத்துக்காக ஒரு குடும்பம் அரசின் கொடுப்பனவு உதவித் திட்டங்களைப் பெற்று, அதைச் சரிவரப் பயன்படுத்தி, தம் வாழ்வாதாரப்பலத்தை உயர்த்தினால் வருடாவருடம் சமுர்த்தி உள்ளிட்ட உதவிகளைப் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை குறைவடைய வேண்டும். ஆனால், இலங்கையில் நிலைமையோ தலைகீழ், சமுர்த்தித் திட்டம் உள்ளிட்ட அரசின் நலன்புரிக் கொடுப்பனவுகளைப் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்துச் செல்கின்றதேயன்றி குறைந்தபாடில்லை. அப்படியானால், இந்தத் திட்டத்தால் கிட்டிய நன்மைதான் என்ன? அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற உதவிக்கொடுப்பனவுகள், திட்டமிட்டபடி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தக்கூடியதா? அதைவைத்து எவ்வகையான தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கலாம்? உதவித்தொகை சரிவரக் கையாளப்படுகின்றதா? என்பன பற்றியெல்லாம் ஆராய்ந்து, பயனாளிகளைக் கண்காணித்து, மீள் மதிப்பீடு செய்திருந்தால் இன்று இலங்கையில் பொருண்மியம் நலிந்த குடும்பங்களின் எண்ணிக்கையைப் பாதியாகக் குறைத்திருக்கலாம். ஆனால், மேற்சொன்ன ஆராய்தல், கண்காணித்தல், மீள் மதிப்பிடல் என்பவற்றை எவரும் மேற்கொள்வதேயில்லை. ஏதோ காசைக் கொடுத்தால் சரி என்ற வகையிலேயே அரச இயந்திரம் கடமைக்கு இந்த உதவிகளை வழங்கிவிட்டு, ஒதுங்கிவிடுவதாலேயே இந்த உதவித்திட்டங்கள் எதுவும் இலக்குகளை நிறைவேற்றத் தவறிவிடுகின்றன.

அரசாங்கம் நலன்புரிக் கொடுப்பனவுகளை வழங்கினால் மட்டும் போதாது. 'நிதி வழங்கலின் பின்னராக கண்காணிப்பு' பேணப்பட வேண்டியது மிகமிக அவசியமானதும் தவிர்க்க முடியாததாகும். அந்தக் கண்காணிப்பு நேர்த்தியாகவும் இதய சுத்தியுடனும் நடைமுறைப்படுத்தப்பட்டால் பல குடும்பங்களில் சுயதொழிலும் பொருண்மியமும் மேலோங்கும். பொறிமுறைகள் அற்ற நிதி வழங்கல் 'தங்கியிருக்கும் வர்க்கத்தை' தோற்றுவிக்குமே அன்றி வேறெந்த நன்மையும் தராது. மீனைக் கொடுப்பதற்குப் பதிலாகத் தூண்டிலைக் கொடுத்து மீன்பிடிக்கக் கற்றுக் கொடுப்பதுதான் நிலைபேறான பயனைக் கொடுக்கும். ஜப்பானியர்களின் கொள்கை அப்படி இருந்தமையால்தான் அந்தநாடு உலகப் போரில் இரு அணுகுண்டுகளால் சிதிலத்தைச் சந்தித்த பின்னரும் மீண்டெழுந்து வலுவாக நிற்கின்றது. ஆனால் நாம்..?

நாளொரு நல்வார்த்தை

மோசமான சூழ்நிலைகளில் மட்டுமே நட்பு உண்மையாக சோதித்துப் பார்க்கப்படுகின்றது.

– டொனால்ட் ட்ரம்ப்



# உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பது உறுதி!

## திறைசேரி அதிகாரி தெரிவிப்பு




**கொழும்பு, ஜூன் 26**

**அரசாங்கம் உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பது உறுதி. அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது என திறைசேரி அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார் என்று சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

சர்வதேசக் கடனை மறுசீரமைப்பதற்கு முன்னர் இலங்கை உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை முன்னெடுக்கவேண்டும் என திறைசேரியின் பிரதான அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நிலைமையின் பாரதூரத்தன்மை காரணமாக நிதியமைச்சு உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை அடுத்தமாதம் ஆரம்பிக்கவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு அங்கீகாரத்தைப் பெறுவதற்காக வாரஇறுதியில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பாக ஆராய்வதற்காக கட்சித் தலைவர்களின் விசேட கூட்டத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று அந்த ஊடகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

# கடனை மறுசீரமைக்கவா வங்கிகளுக்கு விடுமுறை?

## பொருளியலாளர்கள் கேள்வி

கொழும்பு, ஜூன் 26

எதிர்வரும் 30ஆம் திகதி வங்கிகளுக்கான விசேட விடுமுறை என்று அறிவிக்கப்பட்டுள்ளமையானது, கடன் மறுசீரமைப்புக்கான விசேட அறிவித்தலை விடுத்து அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவா? என்று பொருளியலாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

விசேட வங்கி விடுமுறை காரணமாக நாட்டின் நிதிச் சந்தைகள் ஐந்து நாள்களுக்குத் தொடர்ச்சியாக மூடப்படும். ஜூன் 29ஆம் திகதி முதல் ஜூலை மாதம் மூன்றாம் திகதி வரை வங்கிகள் மூடப்படவுள்ளதால் அரசாங்கம் உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பு குறித்த நடவடிக்கைகளை அறிவிக்கவுள்ளது என்ற ஊகங்கள் வெளியாகியுள்ளன. உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பு என்பது எதிர்மறையான விடயமாகக் கருதப்படுகின்றது. எனினும் இந்த ஊகங்களை மறுத்துள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, நாடாளுமன்ற அனுமதி இல்லாமல் உள்நாட்டுப் பொறிமுறை குறித்த அறிவிப்பு வெளியாகாது எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம)

நாளை

27.06.2023

செவ்வாய்க்கிழமை

ஆனி 12

சுபநேரம் : 10.25 – 11.55

ராகுகாலம் : 02.55 – 04.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி, ஞாயிறு விடுமுறை: திட்டத்தை வலுவாக்குங்கள்!

## சைவ மகாசபை அழைப்பு

கொழும்பு, ஜூன் 26

**அறநெறி பிறழ்ந்து போதைக்கும் சீர்கேடுகளுக்கும் ஆளாகிவரும் இளைய சமுதாயத்தை மீட்டெடுக்கும் யாழ். மாவட்டச் செயலரின் முயற்சியின் ஓர் அங்கமான வெள்ளி, ஞாயிறு விடுமுறையை சரிவரப் பயன்படுத்தி, அறநெறிகளைப் போதிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க அனைத்து சைவ அமைப்புகளும் முன்வர வேண்டும் என அகில இலங்கை சைவ மகாசபை அழைப்பு விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் அந்த அமைப்பு ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

வெள்ளி, ஞாயிறு விடுமுறையை சிறார்கள் சரிவர ஆலய வழிபாட்டுக்கும், அறநெறிக்கும், குடும்பத்துடன் நேரத்தைச் செலவிடுவதற்கும் பயன்படுத்தவேண்டும்.

இதற்குரிய நடவடிக்கைகளை அனைத்துச் சைவ அமைப்புகளும் இணைந்து மேற்கொள்ளவேண்டும். கல்வி என்பது வாழ்வதற்கான விழுமியங்களைக் கற்றுத்தரும் மனிதனின் அடிப்படை விடயம். அதில் ஈடுபட்டுள்ள சகலரும் அறத்தையும் உண்மைத்தன்மையும் கடைப்பிடித்தல் அத்தியாவசியமானது. அதுவே மாணவருக்கு சிறந்த முன்மாதிரி.

ஆகவே இந்தத் திட்டத்தை வலுப்படுத்த பிரதேச செயலக ரீதியாகப் பரப்புரை செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்.

இதற்கென அகில இலங்கை சைவ மகாசபையால் முன்னெடுக்கப்படும் வெள்ளிக்கிழமை பக்திப் பேரியக்கத்துடன் கைகோருங்கள் - என்றுள்ளது. (ச-125)

# துர்நாற்றத்தின் மத்தியில் யாழ்.பேருந்து நிலையம்!

## அக்கறையின்றி மாநகரசபை

## பயணிகள் விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

'தூய்மையான நகரம்' என்ற திட்டத்தின் கீழ், ஆங்காங்கே சிலைகளை வைக்கும் யாழ்.மாநகரசபையால், பல பாகங்களிலிருந்தும் பயணிகள் நாள்தோறும் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்தைக் கவனிக்க முடியாதுள்ளது. சுத்தம் பேணுவதற்கான எந்தவொரு செயற்பாடுகளும் பேருந்து நிலையத்தில் இல்லையென பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பேருந்து நிலையத்தைச் சுற்றியுள்ள கழிவகற்றும் வாய்க்கால்கள் நீண்டகாலமாக துப்புரவு செய்யப்படாமல் குடம்பி மற்றும் நுளம்பு பெருக்கத்துடன் காணப்படுகின்றன. அதனால் பயணிகள் மட்டுமன்றி ஊழியர்களும் தொற்றுநோய்களுக்குள்ளாகின்றனர். சிறு கழிவுப் பொருள்களைப் போடுவதற்கான குப்பைத்தொட்டிகள்கூட இல்லை.

அவ்வப்போது அவை வைக்கப்பட்டாலும் சரிவரப் பேணப்படுவதில்லை. குடிதண்ணீர் போத்தல்கள், பொலித்தீன் பைகள், குளிர்பானப் போத்தல்கள் என்பன பஸ் நிலையத்தைச் சூழ்ந்துள்ளன. வெற்றிலை துப்பல்களுக்கும், எச்சில் துப்பல்களுக்கும் சுகாதாரமற்ற முறையில் - துர்நாற்றத்தின் மத்தியில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் காணப்படுகின்றது.

இரவுவேளைகளில் பேருந்து நிலையத்தில் பலர் படுத்து உறங்குவதுடன், சமூக சீர்கேடான செயற்பாடுகளுடன் திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. 'தூய்மையான நகரம்' என்ற திட்டத்தின் மூலம் அங்காங்கே சிலைகளை வைக்கும் யாழ். மாநகரசபை, யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் தொடர்பில் கவனிக்காதுள்ளது.

எனவே பேருந்து நிலையத்தில் சுத்தமான முறையில் பாதுகாப்பை உறுதிப்படுத்தி கழிவகற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை யாழ். மாநகரசபை மேற்கொள்ள வேண்டும் - என்றனர். (ச-106)

# என்.வி.கியூ. சான்றிதழ் கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியால் என்.வி.கியூ. தரச் சான்றிதழுக்கான புதிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அலுமினியம் பொருள் உருவமைத்தல், ஆடை தைத்தல் தொழில்நுட்பம், மோட்டார் வாகன வர்ணம் பூசுதல், தொழில்நுட்பம், கணிய அளவை உதவியாளர், கணினி கிராபிக் வடிவமைப்பாளர் ஆகிய கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிகளை கற்க விரும்புவோர் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில்வழிகாட்டல் நிலையத்துடன்தொடர்புகொண்டுவிண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களை 021-2222358, 021-2212403 ஆகிய தொலைபேசி இலக்கத்தினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பாரதிபுரம், பொன்னகருக்கு

# குடிநீர் விநியோகத்துக்கு விண்ணப்பங்கள் கோரல்

கிளிநொச்சி, ஜூன் 26

கிளிநொச்சி - கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பொன்னகர் மற்றும் பாரதிபுரம் கிராம அலுவலர் பிரிவு கிராமங்களுக்கு உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் இலவச குடிதண்ணீர் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 30ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கமைய இலவச குடிதண்ணீர் இணைப்பைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 155ஆம் கட்டை, ஏ-9 வீதி கிளிநொச்சியில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து குறித்த திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவித்துள்ளனர். (ச-214)

# மோ.சைக்கிள் திருட்டு: சந்தேகநபருக்கு மறியல்

மோட்டார்சைக்கிள் திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவரின் மோட்டார்சைக்கிள் திருட்டுப் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மணியந்தோட்டத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து திருட்டுப்போன மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது. சந்தேகநபர் மீது வழக்குப் பதிவுசெய்து யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-125)

# 'லைட்டர்' வெடித்ததில் பெண்ணுக்கு எரிகாயம்

பளை, ஜூன் 26

'லைட்டரை' பயன்படுத்தி அடுப்பை பற்ற வைக்கமுற்பட்டபோது அது வெடித்ததில் தீக்காயங்களுக்குள்ளான பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பளை இந்திராபுரத்தில் நடந்துள்ளது. அதேபகுதியைச் சேர்ந்த 30 வயது குடும்பப் பெண்ணே எரிகாயங்களுக்குள்ளான நிலையில் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச-9)

# இஸ்ரேலில் வேலைவாய்ப்பு; எவருக்கும் பணம் செலுத்தாதீர்


## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிக்கை

கொழும்பு, ஜூன் 26

இஸ்ரேலில் தாதியர் வேலைகளுக்காக எந்தவொரு வெளித்தரப்பினருக்கும் பணம் செலுத்த வேண்டாம் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக மாத்திரமே இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் தாதியர் வேலைவாய்ப்புகள் உள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி முதல் இஸ்ரேலில் தாதியர் துறையில் 389 இலங்கையர்கள் பணி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுத்தமான தண்ணீரின்றி தருமபுரம் மக்கள் தவிப்பு!

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



கிளிநொச்சி, ஜூன் 26

**கண்டவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் கடந்த 30 வருடங்களாக சுத்தமான தண்ணீரின்றி தூரப் பகுதிகளிலிருந்தே குடிதண்ணீரை எடுத்து வரவேண்டியுள்ளது என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
இங்குள்ள பயன்பாட்டிலுள்ள கிணறுகளில் தண்ணீரின் நிறம் மஞ்சள் காவியாக மாற்றமடைந்துள்ளது.
இதுவரை காலமும் கல்மடுக் குளத்தின் நீர் தொடர்ச்சியாக இந்தப் பகுதிக்கு வருவதால் நாளாந்தத் தண்ணீர்த் தேவையை நீர்நிலை மற்றும் வாய்க்காலிலேயே பூர்த்திசெய்து வந்தோம். தற்போது கல்மடுநகர் குளம் திறக்கப்பட்டு புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதால் தண்ணீரின்றி பெரும் அல்லலுறுகின்றோம். குடிதண்ணீர் மற்றும் நாளாந்த தேவைகளுக்கு தூரப்பகுதிகளிலிருந்தே பெற்று வரவேண்டிய தேவையுள்ளது.
எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சுத்தமான தண்ணீரைப் பெற்றுத்தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-113)

# சடலமாக யுவதி மீட்பு

கொழும்பு, ஜூன் 26
தாயாருடன் வசித்து வந்த இளம் யுவதி ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் காலி மாவட்டம், கரந்தெனிய பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.
குறித்த யுவதி தனது வீட்டை தீயிட்டுக் கொளுத்திய பின்னர் தூக்கில் தொங்கி உயிரை மாய்த்துள்ளார் என முதற்கட்ட விசாரணையில் தெரிய வருகிறது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
எரிக்கப்பட்ட வீட்டில் சிக்கிய தாயார் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
காதல் தோல்வி காரணமாக கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட மனநோய்க்கு குறித்த யுவதி சிகிச்சை பெற்று வந்திருந்தார் என அவரது தாயார் பொலிஸில் வாக்குமூலம் அளித்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-22)

# இலங்கையின் விவகாரங்களில் மேற்குலகு தலையிடக்கூடாது!

## ரஷ்யத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26
இலங்கையின் விவகாரங்களில் மேற்குலகம் தலையிடக்கூடாது என்று இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவென் ஜகாரியன் வலியுறுத்தியுள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
சில சர்வதேச விவகாரங்களில் இலங்கை எடுத்துள்ள சமநிலையான - நடுநிலையான நிலைப்பாட்டை இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவென் ஜகாரியன் பாராட்டியுள்ளார்.
இதேவேளை- மேற்குலக நாடுகள் தங்களின் உள்விவகாரங்கள் குறித்து கவனம் செலுத்தவேண்டும் என தெரிவித்துள்ள ஜகாரியன், இறைமையுள்ள நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவது முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் எனவும் தெரிவித்துள்ளார். (ம)

# போதைக் களியாட்டம்: பன்னிரண்டு பேர் கைது

கொழும்பு, ஜூன் 26
பேஸ்புக் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதைப்பொருள் விருந்து நடைபெற்ற இடமொன்று சுற்றிவளைக்கப்பட்டதில் 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
அவிசாவளை - களனி ஆற்றுக்கருகிலுள்ள ஹொட்டல் ஒன்றில் இந்த விருந்துபசாரம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.
பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அந்த இடம் சுற்றிவளைக்கப்பட்டது. சோதனையில் 12 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 11 கஞ்சா சுருட்டுக்கள், 20 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் உள்நாடு - வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட 20 மதுபானப் போத்தல்களை பொலிஸார் மீட்டுள்ளனர். சந்தேகநபர்கள் மேலதிக விசாரணையின் பின் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# பொலிஸ்மா அதிபருக்கு மீண்டும் சேவை நீடிப்பு?

கொழும்பு, ஜூன் 26
பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு இரண்டாவது சேவை நீடிப்பு வழங்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.
இவரது சேவைக்காலம் இன்றுடன் நிறைவடையவுள்ள நிலையிலேயே சேவை நீடிப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. புதிய பொலிஸ்மா அதிபர் தொடர்பில் அரசமைப்புச் சபைக்கு நேற்று வரை எவ்வித பரிந்துரையும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# எதிர்பார்த்த வருமானம் இவ்வருடம் எட்டமுடியாது

## கலால் திணைக்களம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 26
மதுபானத்தின் விலை அதிகரிப்பால் மது உற்பத்தி மற்றும் விற்பனை குறைந்துள்ளது. அதனால் இந்தவருடம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை எட்டமுடியாது என்று கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில், அண்மையில் தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிக திட்டமிடல் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுக்கூட்டம் இடம்பெற்றது.
இதன்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கலால் திணைக்களத்தால் இந்த வருடம் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் 217 பில்லியன் ரூபா. ஜூன் மாதம் வரை 72.985 பில்லியன் ரூபா மாத்திரமே வருமானம் ஈட்டப்பட்டுள்ளது என திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.
விற்பனை இலக்கு எட்டப்படாமைக்கு, மதுபானத்தின் விலை அதிகரிப்பே பிரதான காரணமெனவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.
இதையடுத்து, கலால் திணைக்களத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்குத் தேவையான திட்டங்களை இரண்டு வாரங்களுக்குள் குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே அறிவுறுத்தினார். (ச-இ)

# பொலிஸாரிடமிருந்து தப்பியவர் சடலமாக மீட்கப்பட்டார்

காலி, கராப்பிட்டிய பிரதேசத்தில் பொலிஸாரின் உத்தரவை மீறி தப்பிச்சென்ற ஓட்டோ சாரதியொருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
பியதிகம பகுதியில் ரயில் தண்டவாளம் அருகே அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த 22ஆம் திகதி பொலிஸாரின் உத்தரவை மீறி தப்பிச் சென்ற ஓட்டோ மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.
அதிலிருந்து இருவரும் தப்பிச்சென்ற நிலையில் ஓட்டோவின் சாரதியே நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இறப்பு தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாக்நெர் படையால் திணறிய ரஷ்யா

## வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதை!

ஆர்.பிரகாஷ்

'இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே...' இவ்வாறுதான் கடந்த சனிக்கிழமை உக்ரைனியர்களின் விடியல் ஆரம்பமானது. 2014ஆம் ஆண்டு நடைபெற்ற போரின்போது, உக்ரைனின் கிரீமியக் குடாவையும், இப்போது நடக்கின்ற ரஷ்ய - உக்ரைன் போரில் உக்ரைனின் எல்லை நகர்களையும் ரஷ்யா கைப்பற்றக் காரணமாக இருந்த வாக்நெர் படைகள், தன்னை வளர்த்துவிட்ட ரஷ்யப் படைகளுக்கு எதிராக எதிர்பாராத வகையில் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்துள்ளன என்பதைவிடவும் உக்ரைனியர்களுக்கு என்ன மகிழ்ச்சி இருந்துவிடப்போகின்றது. உக்ரைனியர்களுக்கு இந்தத் சகாப்தத்துக்கான குதூகலம் இது.

### வாக்நெர் படை என்பது என்ன?

ரஷ்ய அதிபர் புடினுக்கு புதிய நெருக்கடி வழங்கும் வாக்நெர் ஆயுதக் குழுவின் பின்புலம் ஒரு தசாப்தத்துக்கும் குறைவானதாகத்தான் இருக்கிறது. வாக்நெர் ஆயுதக் குழு என்பது ரஷ்யாவில் மறைமுகமாக இயங்கிவரும் தனியார் இராணுவ ஒப்பந்த அமைப்பாகும். இது




ஒருவித கூலிப்படை என்றும் கூறலாம். ஏனெனில், ரஷ்யா மட்டுமல்லாது லிபியா, மாலி, சிரியா எனப் பல பகுதிகளிலும் உள்நாட்டுப் போரில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு ஆதரவாக இந்தக் குழுவினர் இயங்குகின்றனர்.

ஆனால், உலகம் முழுவதும் இந்தக் குழு சட்டத்துக்கு அப்பாற்பட்டே செயற்படுகிறது. ரஷ்யாவிலும் தனியார் இராணுவ ஒப்பந்தகாரர்கள் சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டுள்ளனர். ஆனால், மறைமுகமாக அதிபர் புடினின் ஆதரவோடு, இராணுவத்தின் சம்மதத்தோடு தேவைப்படும்போது இந்தக் குழு இயக்கிக் கொள்ளப்படுகிறது. வாக்நெர் ஆயுதக் குழு உக்ரைனின் கிழக்குப் பகுதியில் இராணுவத் தாக்குதலின்போது பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. குறிப்பாக, கிழக்கு உக்ரைனின் பக்முத் பகுதி கைப்பற்றப்பட்டதில் வாக்நெர் ஆயுதக் குழுவின் செயற்பாடுகளுக்கு அதிபர் புடினே பாராட்டுக்களைத் தெரிவித்திருந்தார். டிமிட்ரி உக்டின் என்ற முன்னாள் ரஷ்ய அதிகாரி மற்றும் யெவ்ஜின் ப்ரிகோஸின் என்ற புடினின் முன்னாள் தலைமை சமையல் நிபுணரும் இணைந்து 2014ஆம் ஆண்டில் இந்தப் படையை உருவாக்கினர். இதில் கிரிமினல் குற்றச்சாட்டுக்குள்ளானவர்கள், சிறை சென்று திரும்பியவர்கள் தான் அதிகம் உள்ளனர். ஏன் தண்டனையிலிருந்து தப்பிக்க நினைப்பவர்கள்கூட 'தி வாக்னர்' குழுவில் இணைந்து தப்பித்துக் கொள்வதுண்டு. ஒரு மூர்க்கத்தனமான ஆயுதக் குழு. 'பக்முத்தில் வாக்நெர் குழுவை இறக்கி எங்கள் படைகளுக்கு பெரும் சேதத்தை ரஷ்யா ஏற்படுத்தியது' என உக்ரைன் குற்றஞ்சாட்டி இருந்தது.

### வெடித்த உட்பூசல்

இந்த நிலையில், அதிபர் புடினால் பார்த்துப் பார்த்து வளர்க்கப்பட்ட வாக்நெர் குழு இப்போது அவருக்கு எதிராகவே திரும்பியுள்ளது. அதன் பின்னணி என்னவென்று பார்த்தால், இந்த ஆயுதக் குழுவுக்கும் ரஷ்ய இராணுவத் தலைமைக்கும் இடையேயான அதிகார மோதல். உக்ரைன் போரின்போது வீரர்களுக்குத் தேவையான ஆயுதங்கள், தளவாடங்களைக் கொடுப்பதில் ரஷ்ய இராணுவம் தாமதம் செய்து சிப்பாய்கள் (வாக்நெர் குழுவினர்) உயிரிழக்கக் காரணமாக இருப்பதாகக் கடந்த சில மாதங்களாகவே வாக்நெர் குழு குற்றம்சாட்டி வந்தது.

கடந்த ஜுன் மாதம் முதல் வாக்நெர் குழுவுக்கு ரஷ்ய இராணுவ அமைச்சகம் பல்வேறு நெருக்கடிகளைக் கொடுக்கத் தொடங்கியது. அந்தக் குழுவில் சேரும் சிப்பாய்கள் இராணுவ ஒப்பந்தங்களில் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனை தொடங்கி பல கெடுபிடிகளை அடுக்கியது. ஆனால், இதற்கு ப்ரிகோஸின் எதிர்ப்புத் தெரிவிக்கலானார். இந்த நிலையில்தான் உக்ரைனிலுள்ள தங்கள் படைகள் மீது ரஷ்ய இராணுவ ஏவுகணை தாக்குதல் நடத்தி இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோரைக் கொன்று குவித்துள்ளதாக ப்ரிகோஸின் புதிய குற்றச்சாட்டை கடந்த சனிக்கிழமை முன்வைத்தார். அதன் நீட்சியாக சனிக்கிழமை காலை அவர் ஓர் எச்சரிக்கையை வெளியிட்டார். 'நாங்கள் 25 ஆயிரம் பேர் இருக்கிறோம். ரஷ்யாவின் இராணுவத் தலைமையை எதிர்த்து முன்னேறுகிறோம். வழியில் எது தடையாக இருந்தாலும் எங்கள் பாணியில் துவம்சம் செய்வோம்' என்று எச்சரித்திருந்தார்.

ஏற்கனவே உக்ரைன் போர் காரணமாக நெருக்கடியில் உள்ள ரஷ்யாவுக்கு இது இன்னொரு அழுத்தமாகச் சேர்ந்து கொள்ள உலகமே இந்தத் திருப்பத்தை உற்று நோக்கி வருகிறது.

### பயங்கரவாதிகளாக அறிவித்தார் புடின்

இதனிடையே, தொலைக்காட்சி உரையில் பேசிய அதிபர் புடின், வாக்நெர் ஆயுதக்குழுவை பயங்கரவாதிகளாக அறிவித்ததுடன், அவர்களுக்கு எதிராக தேசத்துரோகக் குற்றச்சாட்டுக்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். 'வாக்நெர் ஆயுதக் குழு முதுகில் குத்திவிட்டது. இது அப்பட்டமான துரோகம். நாட்டைக் காக்கப் போராடிக் கொண்டிருக்கும்போது தனிநபர் விருப்பங்களுக்காக ஆயுதம் ஏந்துவது தேசத் துரோகக் குற்றம். இக்குற்றத்தில் ஈடுபட்டவர்கள் கடுமையான தண்டனையை அனுபவிக்கவேண்டும். கிரிமினல் குற்றச்சாட்டுக்குள்ளான தலைமையைப் பின்பற்றாமல் வீரர்கள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்' என்று கூறியிருந்தார். இதற்குப் பதிலடி தரும் வகையில் கருத்து வெளியிட்ட ப்ரிகோஸின், 'தாய்நாட்டுக்குத் துரோகம் செய்துவிட்டதாகக் கூறுகிறார் அதிபர் புடின். அது ஓர் ஆழமான தவறு. நாங்கள் தாய்நாட்டின் பாதுகாவலர்கள். புடினின் வேண்டுகோளை எனது சிப்பாய்கள் கேட்கமாட்டார்கள். ஏனெனில், எங்களுக்கு எங்களின் தேசம் ஊழல், சதி மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகத்தில் சிக்கியிருப்பதில் விருப்பமில்லை' என்று தெரிவித்தார்.

அல்கொய்தா போன்ற ஆயுதக் குழுக்கள் வளர்த்துவிட்டவர்களுக்கே நெருக்கடியான கதையை இந்த உலக வரலாற்றில் உள்ளது. அப்படித்தான் இந்த வாக்நெர் ஆயுதக் குழுவும் இன்று புடினுக்கு புதிய நெருக்கடியாக மாறியுள்ளது என்ற கருதப்பட்ட நிலையில், பெலாரஸின் தலையீட்டை அடுத்து நேற்றுமுன்தினம் பின்னிரவு (இலங்கை நேரப்படி நள்ளிரவு ஒரு மணியளவில்) மொஸ்கோ மீதான படையெடுப்பைக் கைவிட்டது வாக்நெர் படை. அந்த அமைப்பின் தலைவர் பெலாரஸ் செல்லவுள்ளார், அவர் அங்கு அரசியல் தஞ்சம் அடையவுள்ளார். இதற்கு ரஷ்யாவும் உடன்பட்டுள்ளது. இப்போது கேள்வி என்னவென்றால், வாக்நெர் படையில் இருந்த பல்லாயிரம் கிளர்ச்சியாளர்கள் என்னவாகப்போகின்றனர்? என்பதுதான். ஏனெனில் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆயுதக்குழுவுக்கு பெலாரஸ் தஞ்சமளிக்காது. அது அந்த நாட்டின் இராணுவ இருப்புக்கே ஆபத்து. அதேநேரம் இந்தக் கிளர்ச்சியாளர்களை ரஷ்யா தண்டிக்காமலும் விடாது. ஏனெனில். இது புடினின் கௌரவத்துடன் சம்பந்தப்பட்ட விடயம். எவ்வாறு பார்த்தாலும் ரஷ்யாவில் ஓர் உள்நாட்டுக் கலவரத்துக்கான பொறி இருந்து கொண்டுதான் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்மூழ்கி விபத்து கனடா விசாரிப்பு

டோக்கியோ, ஜுன் 26
நீர்மூழ்கிக் கப்பல் விபத்து தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என கனேடிய பாதுகாப்பு போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.
டைட்டானிக் கப்பலின் சிதைவுகளை பார்வையிடச் சென்ற சுற்றுலாப் பயணிகளை தாங்கிய நீர்மூழ்கி கப்பல் ஒன்று அண்மையில் விபத்துக்குள்ளானது, விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்திருந்தனர்.
இந்த நிலையில் குறித்த நீர் மூழ்கிக் கப்பல் விபத்துக்குள்ளான விதம் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என கனடா அறிவித்துள்ளது. இந்த நீர்மூழ்கி கப்பல் கனேடிய கொடியை தாங்கி கனேடிய துறைமுகம் ஒன்றிலிருந்து புறப்பட்டது எனத் தெரிவிக்கப்படுவதற்கு அமைவாக கப்பல் விபத்து தொடர்பில் விசாரணைகளை கனடா ஆரம்பித்துள்ளது. (ச-இ)



## வாக்நெர் குழுவினர் கூண்டோடு கைதா?

### பெலாரஸில் வைத்துத் தூக்க புடின் திரைமறைவு நடவடிக்கை



**மொஸ்கோ, ஜுன் 26**

**வாக்நெர் குழுவினர் பலநூறு பேரை பெலாரஸில் வைத்துக் கைதுசெய்ய ரஷ்ய அதிபர் புடின் திரைமறைவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**


ரஷ்யாவின் துணை இராணுவக் குழுக்களாக கூலிப்படைகள் உள்ளன. இவை ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து சட்டவிரோதமாகச் செயற்பட்டு வருகின்றன. உக்ரைன் போரில் 'வாக்நெர்' என்று அறியப்படும் கூலிப் படையின் செயற்பாடு ரஷ்யாவின் எழுச்சிக்கு முக்கியமான காரணமாக இருந்தது.
குறிப்பாக உக்ரைன் சிப்பாய்களை நேருக்கு நேராக இந்தக் குழுவினரே எதிர்த்து வருகின்றனர். எனினும் கடந்த சில வாரங்களாக இந்தக் குழுவுக்கும் ரஷ்ய இராணுவ அமைச்சகத்துக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. உக்ரைன் போரில் ரஷ்ய இராணுவம் சரியான நேரத்துக்கு போர்த் தளபாடங்களை வழங்காமல் எமது சிப்பாய்களைப் பலியாக்குகின்றது என்று வாக்நெர் படை அண்மையில் குற்றஞ்சாட்டியிருந்தது.
இதையடுத்து ரஷ்ய இராணுவத்துக்கும் வாக்நெர் படைகளுக்கும் இடையிலான கருத்து மோதல் உச்சம் பெற்றது.
இதன் தொடர்ச்சியாக ரஷ்ய இராணுவத்துக்கு எதிராகப் போர் அறிவிப்பைச் செய்தது வாக்நெர் படை. நேற்றுமுன் தினம் தலைநகர் மொஸ்கோவைக் கைப்பற்றுவதற்காக அந்தப் படைகள் சென்றுகொண்டிருந்த நிலையில் பெலாரஸின் தலையீட்டால் இரு தரப்புக்கும் இடையில் அமைதி ஏற்பட்டது. வாக்நெர் படைகளின் தலைவர் எவ்ஜெனி பிரிகோசின் பெலாரஸுக்குள் அரசியல் தஞ்சம் பெற பெலாரஸ் அனுமதி வழங்கியதையடுத்தே இந்தப் பதற்றம் முடிவுக்கு வந்தது.
இந்த நிலையில், எவ்ஜெனி பிரிகோசின் பெலாரஸுக்குள் சென்ற பின்னர் வாக்நெர் படைகளில் கிளர்ச்சிக்குத் திட்டமிட்டவர்களைக் கூண்டோடு கைதுசெய்ய புடின் திட்டமிட்டுள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ம)

### டைட்டானிக்கை 12 தடவைகள்

## பார்வையிட்டவரும் நீர்மூழ்கியில் சாவு

*ஆழ்கடல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிப்பு*

வொஷிங்டன், ஜுன் 26
'ரைட்டன்' நீர்மூழ்கியில் பயணித்து உயிரிழந்தவர்களில் ஒருவர் டைட்டானிக் கப்பல் மூழ்கிய இடத்தை 12 முறை பார்வையிட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.
டைட்டன் நீர்மூழ்கியின் 'பைலட்' ஓசன்கேட் எனும் நிறுவனத்தை தொடங்கி கடந்த 2009ஆம் ஆண்டு டைட்டன் நீர்மூழ்கியை உருவாக்கினார். இவர் கடந்த 1981 ஆம் ஆண்டு தனது 19 ஆவது வயதில் உலகில் மிகவும் இளம் வயது போக்குவரத்து விமான பைலட் என்ற பெருமையை பெற்றவர்.
டைட்டன் நீர்மூழ்கியில் பலமுறை ஆழ்கடல் பயணம் மேற்கொண்ட இவர் தற்போது மோசமான விபத்தில் இறந்துள்ளார்.
அதேபோல் நீர்மூழ்கியில் பயணம் செய்த இங்கிலாந்து தொழிலதிபர் ஹாமிஸ் ஹார்டிங் என்பவர் மேற்கு பசுபிக் கடலின் 'மரியனா டிரன்ச்' என்ற இடத்தில் 4 மணிநேரம் 15 நிமிடங்கள் பயணம் செய்துள்ளார். அதன் ஆழம் 36 ஆயிரம் அடி. டைட்டானிக் கப்பல் இருக்கும் ஆழத்தைவிட இரண்டரை மடங்கு அதிக ஆழமான பகுதியாகும். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 77 வயதுடைய டைவர் பால் ஹென்றி என்பவர் பலமுறை ஆழ்கடல் பயணம் மேற்கொண்டு டைட்டானிக் கப்பல் மூழ்கிய இடத்தை 12 முறை பார்வையிட்டுள்ளார். இதனால் இவருக்கு 'மிஸ்டர் டைட்டானிக்' என்ற பட்டப் பெயரும் உள்ளது. பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த தந்தையும், மகனும் முதல் முறையாக ஆழ்கடல் பயணத்தில் ஈடுபட்டவர்களாவர் என ஆழ்கடல் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)



### கண்ணுக்குத் தெரியாத


## கண்ணாடிக் கட்டடம் சவூதி அரேபியாவில்

ரியாத், ஜுன் 26
சவூதி அரேபியாவில் முற்றிலும் கண்ணாடியால் ஆன சொகுசுக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.
பாலைவனத்தின் நடுவே கட்டப்பட்ட இந்தக் கட்டடத்துக்கு அரபுமொழியில் 'மராயா' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதற்கு "எதிரொளிப்பு" எனப் பொருள்படுகிறது. 'மராயா' என்ற இந்தக் கண்ணாடிக் கட்டடத்தை இரு இத்தாலிய வடிவமைப்பு நிறுவனங்கள் இணைந்து கட்டியுள்ளன.
பாலைவனத்தில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால், அதற்குத் தீர்வாக புதிய வகையான கண்ணாடிகளால் இந்தக் கட்டடம் உருவாக்கப்பட்டுள்ளது.
இந்த வகைக் கண்ணாடி மூலம் மணல் புயல்கள், வெப்ப நிலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் பாலைவனத்தில் நிகழக்கூடிய பிற வானிலை சவால்களையும் சமாளிக்கமுடியும் என்று கட்டடத்தை வடிவமைத்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)



## அழிவுற்ற டிராகன் கண்டுபிடிப்பு

மொஸ்கோ, ஜுன் 26
ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் அழிந்து போனதாகக் கருதப்பட்ட டிராகன் அவுஸ்திரேலியாவிலுள்ள விக்ரோரியாவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
இந்த இனம் முற்றாக அழிந்துபோய்விட்டது அல்லது முற்றாக அருகும் நிலையில் உள்ளது எனக் கருதப்பட்ட டிரகனே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
1969ஆம் ஆண்டின் பின்னர் 'எயர்லஸ் டிரகன்' என அழைக்கப்படும் 15 சென்றி மீற்றர் விலங்கே கண்டுபிடிக்கபட்டுள்ளது.
அதற்கமைய இந்த வகை விலங்கு இன்னமும் எஞ்சியுள்ளது தெரியவந்துள்ளதாக விக்ரோரியாவின் சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## இந்தியாவில் நேருக்குநேர் மோதிய ரயில்கள்

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் இரண்டு சரக்கு தொடருந்துகள் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்தில் தொடருந்தின் 12 பெட்டிகள் தடம் புரண்டுள்ளன. விபத்தில் தொடருந்தின் இயக்குநர் ஒருவர் காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## தென்மராட்சி ரி.பி.பி.எல். தொடரில்

# கிண்ணம் வென்றது பிக்வூற்றர்ஸ் அணி!

யாழ்ப்பாணம், ஜூன் 26

உதயன் ஊடக அனுசரணையுடன் பிரமாண்டமாக நடத்தப்பட்ட ரி.பி.பி.எல். (T.B.B.L. Thenmaradchi Big Bash League) தொடரின் வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்த நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணி, 5 இலட்சம் ரூபா பணப் பரிசிலையும் தட்டிச் சென்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உதயன் குழுமத் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் பரிசில்களை வழங்கினார்.

10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்த தொடரின் இறுதியாட்டம் நேற்று கைதடி வளர்மதி விளையாட்டு மைதானத்தில் விமரிசையாக நடைபெற்றது. இறுதியாட்டத்தில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணியும், நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பாக சுகந்தன் அம்பா 24 ஓட்டங்களையும், கஜிந்தன் 12 ஓட்டங்களையும், கவிராஜ் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் நிதர்சன் 4 விக்கெட்டுக்களையும், சாகித்தியன் 2 விக்கெட்டுக்களையும், சுமன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

70 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணி 9 பந்துப்பரிமாற்றங்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்து 7 விக்கெட்டுக்களால் கிண்ணத்தைத் தன்வசமாக்கியது.

அந்த அணி சார்பாக சாகித்தியன் 32 ஓட்டங்களையும், சுதா 29 ஓட்டங்களையும், அஜந்தன் 3 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் மதிவதனன் 2 விக்கெட்டையும், நிலக்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணியைச் சேர்ந்த சாகித்தியன் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாம் இடத்தைப் பெற்ற மட்டுவில் சுப்பர்கில்லிஸ் அணிக்குகிண்ணத்துடன், 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணப் பரிசிலும் வழங்கப்பட்டது.

அதேவேளை, தொடரின் பெறுமதிமிக்க வீரராக ஜதுவும், அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரராக நிதர்சனும், அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரராக ஜதுவும், பிடியெடுப்பைப் பெற்ற வீரராக விதுவும் தெரிவு செய்யப்பட்டு கிண்ணம் வழங்கப்பட்டதுடன், பயர்பிளே விருதை மட்டுவில் பைற்றரஸ் அணி பெற்றுக் கொண்டது. (எ)

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழா கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ய-66)



## மின்கட்டணத்...

யால் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த மின் கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் 30 ஆம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

0 முதல் 30 வரை 10 வீதமும், 31 முதல் 60 வரை 7 வீதமும், 61 முதல் 120 வரை 5 வீதமும், 121 முதல் 180 வரை 3 வீதமும், 180க்கு மேல் 2 வீதமும் கட்டணம் குறைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-6)

## பொலிஸார்...

மன்னார், உயிலங்குளத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. நேற்றுமுன்தினம் மாலை உயிலங்குளம் மதுபானசாலை அருகே சிலர் குழப்பத்தில் ஈடுபடுகின்றனர் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் அங்கு விசாரணைக்காகச் சென்றுள்ளனர். அங்கு குழப்பத்தில் ஈடுபட்டவர்களை விசாரிக்க முற்பட்டபோது, அவர்களில் சிலர் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த பொலிஸார் மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மேலும் 9 பேர் உயிலங்குளம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுச் சரணடைந்துள்ளனர். அவர்கள் மன்னார் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-எ-26,213)

## மறுசீரமைப்புக்காக...

விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு கடனைமறுசீரமைக்கும்செயற்பாட்டில் நாட்டிலுள்ள எந்தவொரு வங்கியின் வைப்புத் தொகைக்கும் மற்றும் வட்டிகளுக்கும் பாதிப்பு ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ)

(தொடர்புடைய செய்தி உள்ளே)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவநேசன் பரமேஸ்வரி

தோற்றம் : 27.04.1935 மறைவு : 25.06.2023



ஊறாவில், காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வருணன், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவநேசன் பரமேஸ்வரி நேற்று (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.45 மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் - சரஸ்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருகளும், நாகலிங்கம் சிவநேசனின் அன்பு மனைவியும், மனோன்மணி குலசேகரம் (கனடா), காலஞ்சென்ற நேசமணி சின்னத்துரை , ஜெயராசா அவர்களின் பாசமிகு சகோதரியும், சிவபாஸ்கரன் (கனடா), சிவபாலன் (கனடா), கலைச்செல்வி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவராணி (கனடா), சந்திரவதனி (கனடா), சுரேந்திரராஜ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கோகுலராதை, காயத்திரி - கிசோபன் , கிருஷ்ணவி , துளிர் , தூயவன் , ரிசிகேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்நிதி வீதி, வருணன் அச்சுவேலி. 077 656 8998

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் இந்துவில் பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 26

ஆங்கில ஆசிரியர் அமரர் அ.க.ந. விஜயரத்தினத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆங்கிலப் பேச்சுப் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரி நடராஜா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் அ.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் மூ.செல்வஸ்தான் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

# துப்பாக்கிச் சூட்டில் ஓட்டோச் சாரதி பலி!

அம்பலாங்கொடை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஓட்டோச் சாரதியொருவர் உயிரிழந்துள்ளார் என அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர். மூன்று பிள்ளைகளின் தந்தையான 38 வயதுடைய நபரே துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளார். அம்பலாங்கொடையிலிருந்து தனது வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது இனந்தெரியாத இருவரால் குறித்த நபர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ச-இ)

# மின்கட்டணத் திருத்தம் பொதுக் கலந்தாய்வு!

கொழும்பு, ஜூன் 26

மின்கட்டணத் திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் கருத்துகளைப் பெறுவதற்காக சிறப்பு பொதுக் கலந்தாய்வு கூட்டமொன்றை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனப் பொதுப்பயன்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

இதற்காக கருத்தறியும் அமர்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மின்கட்டண உயர்வு அல்லது குறைப்பு தொடர்பாக பொதுமக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்புள்ளது. தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் உட்பட எவரும் இதில் கருத்துக்களை வழங்க முடியும். (ச-இ)

## மாகாணக் கல்வித் திணைக்களம் வடமாகாணம்
## தளபாடப் பெறுகை - 2023

01. மாகாணக் கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் கிளிநொச்சி தெற்கு, கிளிநொச்சி வடக்கு, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மன்னார், மடு வலயங்களுக்கு கீழ்வரும் விபரப்படியான பெறுகையினை மேற்கொள்வதற்குத் திணைக்களப் பெறுகைக்குழு (பெரிது) முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைக் கோருகின்றது.

02.

| Procurement No. | Item | No. of Category Items | Estimated Cost in Mn. | Bid Security Rs. | Non-Refundable fee Rs. |
|---|---|---|---|---|---|
| NP/20/FB/PROC/SCA/GEMP/2023/12 | Students chairs with arm | 200 | 2.00 | 20,000 | 3,500 |
| NP/20/FB/PROC/ATS/GEMP/2023/13 | Activity Table (Set) | 50 | 2.25 | 22,500 | 3,500 |
| NP/20/FB/PROC/SAG/GEMP/2023/14 | Steel Almirah with glass door | 25 | 1.75 | 17,500 | 3,500 |
| NP/20/FB/PROC/SCH/GEMP/2023/15 | Students Chair | 200 | 1.80 | 18,000 | 3,500 |
| NP/20/FB/PROC/TTA/GEMP/2023/16 | Teacher Table | 1116 | 30.69 | 307,000 | 7,000 |
| NP/20/FB/PROC/TTC/GEMP/2023/17 | Teacher Chair | 1116 | 13.95 | 139,500 | 7,000 |

03. பெறுகைகள் அனைத்தும் தேசிய போட்டி விலைக்கேளவி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.

04. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் பகுதி II இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

05. வழங்குனர்கள் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணத்தினை இலங்கை வங்கியின் "0005932043" இலக்கத்திற்கு வைப்புச் செய்து பற்றுச்சீட்டினை அலுவலகத்தில் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 26.06.2023 தொடக்கம் 10.07.2023 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

06. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) 04.07.2023 காலை 10.00 மணிக்கு வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

07. மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் பிரதம கணக்காளர் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

08. விலைக் கேள்விகள் 2023.07.10ம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

09. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்குத் திணைகள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு பூரண அதிகாரம் உள்ளது.

**தி. ஜோண் குயின்ரஸ்**
**தலைவர்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**திணைக்களப் பெறுகைகள் குழு (பெரிது),**

(N - 1)

## PERSONAL CLASS

தரம் 06 முதல் O/L வரையான மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் & A/L மாணவர்களுக்கு பௌதீகவியல், இரசாயனவியல், பொருளியல், வணிகக்கல்வி உட்பட அனைத்து பாடங்களும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

T.P : 077 199 7781

(CS 25531)(K-1)

## கண்ணீர் அஞ்சலி

### கணேஷ் முத்தாச்சி

(சரவணை கிழக்கு வேலணை)

மலர்வு 06.08.1934 உதிர்வு 23.06.2023



எமது ஆலய பரிபாலன சபையின் உபதலைவர் **கணேஷ் ஜெகதீஸ்வரன்** அவர்களின் அன்புத் தாயார் **கணேஷ் முத்தாச்சி** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கர்ணந்தோட்ட கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்
நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்.

(CS25356)(J-1)

## 45ஆம் நாள் நினைவுதின அழைப்பு

கடந்த (13.05.2023) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் தர்மகுலசிங்கம் சந்திரேஸ்வரி (சந்திரா)



அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.06.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் **துர்க்கா மணிமண்டபத்தில் (நல்லூர் கோயில் பின்புறம்)** நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்வு 29.11.1951 உதிர்வு 13.05.2023

**370, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 - 07 - 1961

மறைவு 25 - 06 - 2023

### திருமதி அநிதா அமிர்தலிங்கம்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அநிதா அமிர்தலிங்கம் நேற்று (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்கள்ான மாணிக்கவாசகர் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், துஷ்யந்தியின் அன்புத் தாயாரும், உமாகாந்தன் இன் அன்பு மாமியாரும், வாசுகி, சுதாகரன், சிறிகரன் ஆகியோரின் சகோதரியும், செல்வராணி, நடராசா, சுஜாதா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2023) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கந்தவுடையார் வீதி,**
**பருத்தித்துறை.**

**தொலைபேசி இலக்கம்**
**077 174 0572**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CR 40226)(G-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நலன்புரித்திட்ட தெரிவில் முறைகேடுகள் பரிசீலனை!

*பதில் நிதியமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 26
அரசாங்கத்தின் நலன்புரித் திட்டத்துக்காகத் தெரிவானோரின் பெயர்ப்பட்டியலில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன எனப் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. இது தொடர்பில் கிடைக்கப்பெறும் ஆட்சேபனைகள் குறித்து ஆராய்ந்த பின்னர் மறுசீரமைக்கப்படும் என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:- புதிய நலன்புரித் திட்டக் கொடுப்பனவுத் தெரிவில் தகைமையற்றவர்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்துடன் நாட்டின் சில பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மன்னார், அம்பாறை, திருகோணமலை, மாத்தறை, ராகம மற்றும் பெலியத்த உள்ளிட்ட பகுதிகளிலிருந்து போராட்டங்கள் பதிவாகியுள்ளன. இது தொடர்பான மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகள் குறித்து ஆராய்ந்த பின்னர், அதனைச் சீர்செய்யமுடியும். இந்தக் கொடுப்பனவுக்கான இரண்டாம் கட்ட விண்ணப்பம் கோரல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இடம்பெறும். இதன்போது, தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும் - என்றார். (ச)



'ஏழாலை' எனும் பெயர் உருவாகக் காரணமான ஏழு ஆலயங்களில் ஒன்றான 'ஏழாலைச் சிவன்' என அழைக்கப்படும் ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் முத்தேர் பவனி நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அடியவர்களின் அரோகரா கோஷம் முழங்க, சிறப்பாக நடைபெற்றது. (ம-66)



# ஈரான் பெற்றோலுக்கு இலங்கை தேயிலை

## பண்டமாற்று வர்த்தகம் ஜூலையில்

**கொழும்பு, ஜூன் 26**
**ஈரானில் இருந்து எரிபொருள்களைப் பெற்றுக்கொண்டு, அதற்குப் பதிலாக இலங்கைத் தேயிலையை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜூலை மாதம் முதல் இந்த வர்த்தகம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.**

ஈரானிடமிருந்து இலங்கை 250 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எரிபொருளைப் பெற்றுள்ளது. அந்தக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காகவே தேயிலை உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படவுள்ளன. இந்த ஒப்பந்தத்தின்படி மாதம் ஒன்றுக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான தேயிலையை ஈரானுக்கு 48 மாதங்களுக்கு ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
பண்டமாற்று வர்த்தகம் அல்லது பண்டமாற்று முறையின்கீழ் ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்த தேயிலைக்கான கொடுப்பனவை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செலுத்தவுள்ளது. (ச-இ)



# கோப்பாய் கலாசாலையில் சிநேகபூர்வ விளையாட்டு!

யாழ்ப்பாணம், ஜூன் 26
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டை முன்னிட்டு கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்குப் போட்டிகள் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் ச.லலீசன், கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தம் ஆகியோரின் இணைத் தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை விரிவுரையாளர்களான கலாநிதி நி.நல்லையா, திருமதி ஜெ.தியாகலிங்கம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-66)

# சட்டவிரோத ஆயுதங்கள்: தகவலளித்தால் சன்மானம்

கொழும்பு, ஜூன் 26
சட்டவிரோதத் துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகளைத் தேடும் நடவடிக்கைகளுக்கு உதவும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் அதுதொடர்பில் தகவல்களைப் பெற்றுத்தரும் தரப்பினருக்கு வழங்கப்படும் சன்மானத் தொகையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பில் பொலிஸ் ஊடகப்பிரிவு விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
சட்டவிரோதத் துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள் புழக்கத்தில் இருப்பது, இந்த நாள்களில் பல குற்றச்செயல்களுக்கு பிரதான காரணமாக இருப்பதால் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.
பொதுப் பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின்படி, சட்டவிரோதத் துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகளைத் தேடும் நடவடிக்கைகளுக்கு உதவும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் தனிநபர் தகவல் வழங்குநர்களுக்கு வழங்கப்படும் சன்மானத் தொகையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் (நேற்று) அடுத்த மாதம் 31ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ள சுற்றி வளைப்பின் போது கைப்பற்றப்படும் சட்டவிரோதத் துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகளுக்கு வழங்கப்படும் வெகுமதித்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ம)

# 340 கோடி ரூபா பெறுமதியான கல்வி உபகரணங்கள் விரயம்!

*கல்வி அமைச்சு அசமந்தம்*


கொழும்பு, ஜூன் 26
ஸ்மார்ட் முறைக் கற்பித்தலுக்காக 2019ஆம் ஆண்டில் 340 கோடி ரூபா பெறுமதியான உபகரணங்களை கல்வியமைச்சு விரயம் செய்துள்ளமை பொதுக்கணக்குகளுக்கான நாடாளுமன்றக் குழுவான 'கோபா' குழுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கல்வி அமைச்சின் தற்போதைய செயற்பாடுகளை ஆராய்வதற்காக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தலைமையில் இந்தக் குழு நாடாளுமன்றத்தில் அண்மையில் கூடியது.
கல்வியமைச்சால் 2019ஆம் ஆண்டு 340 கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 'டப்' கணினிகள் உள்ளிட்ட ஸ்மார்ட் முறைக் கற்பித்தலுக்கான உபகரணங்கள் முறையாக விநியோகிக்கப்படாமை தெரியவந்துள்ளது. இதுதொடர்பில் முழுமையான அறிக்கையை செப்ரெம்பர் 26ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என 'கோபா' குழுவின் தலைவர் லசந்த அழகியவன்ன கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)



கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய சோபகிருது வருட மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை [illegible] க்கணக்கான [illegible] தலுடன் சிறப்பாக நடைபெற்றது. (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் மஹா கும்பாபிஷேகம் நேற்றுப் பக்திபூர்வமாக இடம்பெற்றது. பெருமளவான பக்தர்கள் இதில் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர். (ம-27)


அமரர் ஆங்கில ஆசிரியர்

**அ.க.ந. விஜயரத்தினம்**

அவர்களின்

## நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்



**அமரர் ஆங்கில ஆசிரியர் அ.க.ந. விஜயரத்தினம்** B.A (Lond)
அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்குமுகமாக, காரைநகர் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட

**"ஆங்கிலப் பேச்சுப்போட்டி - 2023" இன் பரிசளிப்பு நிகழ்வுகள்**

- **இடம் :- நடராஜா மண்டபம், யா/காரைநகர் இந்துக் கல்லூரி, காரைநகர்.**
- **திகதி :- 26.06.2023, திங்கட்கிழமை**
- **நேரம் :- பிற்பகல் 2 மணி**

**தலைவர்**

**திரு. அ.ஜெகதீஸ்வரன்** அவர்கள்
அதிபர், யா/காரைநகர் இந்துக் கல்லூரி, காரைநகர்

**பிரதம விருந்தினர்**

**திரு. மு.செல்வஸ்தான்** அவர்கள்,
அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம்.

**சிறப்பு விருந்தினர்கள்**

**திரு.ந.பரமசிவம்** அவர்கள்
ஓய்வுநிலை அதிபர், யா/ யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.

**திரு. சிவகுரு மகேந்திரன்** அவர்கள்,
ஓய்வுநிலை பிரதி அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

**திரு. இராஜேந்திரம் ஜோர்ஜ்** அவர்கள்
ஓய்வுநிலை பிரதி அதிபர், யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

**திருமதி சத்தியகுமாரி சிவகுமார்** அவர்கள்
அதிபர், யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

**திருமதி அஜந்தினி யதீஸ்குமார்** அவர்கள்
அதிபர், யா/ யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.

**குறிப்பு:- போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள், புலம்பெயர் வாழ் நண்பர்கள்

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(cs25349) (N-1)



## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 • 06 • 1944 | 18 • 06 • 2023 |



## திரு. பொன்னையா பூபாலசிங்கம் (புகழானந்தம்)

யாழ். திருநெல்வேலி கிழக்கு, கேணியடியைப் பிறப்பிடமாகவும், வவுனியா மற்றும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பொன்னையா பூபாலசிங்கம் (புகழானந்தம்) கடந்த (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை அவுஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் மகனும், நல்லையா - பரிபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மினியின் அன்புக் கணவரும், சுஜீதரன் (வவுனியா), வினோதரன் (அவுஸ்திரேலியா), பிரகாசினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், ரஜனி, விஜிதாரணி, சுரேந்திரன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் தங்கேஸ்வரி, சத்தியபாமா, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், துரைச்சாமி, பஞ்சரட்ணம் மற்றும் ராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரதீஷ், டினுஷ், ஹரிஸ், சனோஸ், நிதீஸ், ஷகீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் வவுனியா இல்லத்தில் (36/1 10 ஆம் ஒழுங்கை, வைரவப்புளியங்குளத்தில் நடைபெற்று பூதவுடல் தட்சணான்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**36/1 , 10 ஆம் ஒழுங்கை,**
**வைரவ புளியங்குளம், வவுனியா.**

**தகவல்:**
**பூபாலசிங்கம் சுஜீதரன் (மகன்)**

**077 282 5138, 024 222 1833**

(CS 25348)(K-1)



# மரண அறிவித்தல்



பிறப்பு 26.11.1937

இறப்பு 23.06.2023

## திரு. இராமநாதன் பரராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் தொலைத்தொடர்புத் திணைக்களம்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும்,380/6, கோவில் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராமநாதன் பரராஜசிங்கம் அவர்கள் கடந்த (23.06.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன், பொன்னாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், லெட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம், சிரேஸ்ட போதனாசிரியர் தொலைக்கல்வி) அவர்களின் அன்புக் கணவரும், சுபாசினி (பிரான்ஸ்), சுதாசினி (கனடா), சுலோசினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாகாண திறைசேரி, வடக்கு மாகாணம்), குகானந்தன் (கனடா), நிர்சாந்தினி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மணிவண்ணன் (பிரான்ஸ்), உமாசுதன் (கனடா), சிவகுமாரன் (ஆசிரியர், யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), நிலானி (கனடா), குகப்பிரியன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லாச்சி, பார்வதி, கிருஸ்ணபிள்ளை, புவனேஸ்வரி, தயாவதி மற்றும் திலகவதி, கிருஸ்ணவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சின்னையா, மயில்வாகனம், குணரத்தினம், திருநாவுக்கரசு, செல்வராசா, முத்தையா, நாகம்மா, அன்னபூரணம், கந்தசாமி, சரஸ்வதி, நித்தியானந்தன் மற்றும் சரஸ்வதி, இளையதம்பி, இராசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பவித்ரன், கவித்ரன், சரண், ஆரணி, வான்கோ, சிவநயனி, நிலவு, பிறை, தணிகையன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**380/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்**

(CS 25350) (K-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி துணை







# வேலணை பெருங்குளம்
# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் பெருங்கோயில் புனராவர்த்தன
# சம்புரோக்ஷண அஷ்டபந்தன
# நவ (9)குண்ட பக்ஷ உத்தம மகா யாக பிரதிஷ்ட
# மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ் - 2023

## எண்ணெய்க்காப்பு தைலாப்பியாங்கம்

**26.06.2023 திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல் 27.06.2023 செவ்வாய்க்கிழமை மாலை 04.00 மணிவரை**

## கும்பாபிஷேகம்

**28.06.2023 புதன்கிழமைபகல் 9.26 மணிமுதல் 11.22 மணிவரை**

திருச்சிற்றம்பலம்
வேலணையூராள் விளங்குபெருங் குளத்தின்பால்
அசைந்து நின்று அருள் பாலிக்கும் சீலத்தாள்
முத்துமாரி அம்மனாம் அந்த மூத்தம்மை தாள்
வணங்கின் சித்திக்கும் எல்லாம் சிறந்து
திருச்சிற்றம்பலம்

**அம்பிகை அடியார்களே !**

சிவபூமியாம் ஈழமதன் சிரசில் விளங்கும் யாழ்ப்பாணத்தின் தென்மேற்கு திசையில் சைவமும் தமிழும் தான தர்மமும் தனமும் ஒருங்கே விளங்கும் புண்ணிய பூமியாம் வேலணை பெருங்குளம் பதிதனில் மூர்த்தி தலம் தீர்த்தம் ஒருங்கே அமைந்த திவ்விய ஷேத்திரத்தில் வீற்றிருந்து அடியவர்களுக்கு வேண்டியதை திருவருள் புரியும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளான விநாயகர், மஹாலட்சுமி, கருமாரி சனீஸ்வரன், நவக்கிரகம், வைரவர் சண்டேஸ்வரி ஆகிய மூர்த்தங்களுக்கும் நிகழும் மங்கல மிகு சோபகிருது வருஷம் ஆனி மாதம் 13 ஆம் நாள் 28.6.2023 புதன்கிழமை வளர்பிறை தசமிதிதியும் சித்திரை நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய பகல் 9.26 மணிமுதல் 11.22 மணிவரை வரும் சிங்க லக்கின சுப முகூர்த்த வேளையில் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் என்னும் பெரும் சாந்தி பெருவிழா நிகழத் திருவருள் கூடியுள்ளது. ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மெய்யடியார்கள் அன்றும் அதற்கு முன்னும் பின்னும் நிகழும் கிரியா நிகழ்வுகளைக் கண்டு தரிசித்து ஸ்ரீ முத்துமாரி திருவருளைப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வீர்களாக.

**மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்**



**துவாரகா**
**நகை மாடம்**
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
**இல. 120, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**நியூ பிரியங்கா**
**நகை மாளிகை**
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
**இல. 68, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். 021 222 5644**
**இல. 69, யாழ் வீதி A9, கிளிநொச்சி** (கச்சேரிக்கு முன்)
**0777 175 059, 021 228 5433**



**நாதன் பல்பொருள் வாணிபம்**



பலசரக்குப் பொருள்களை நியாய
விலையில் பெற்றுக்கொள்ள நாட
வேண்டிய ஒரே இடம்
**இல. 07, பஜார் வீதி,**
**புதிய சந்தை, வவுனியா**



**மதனா நகை மாடம்**
22 கரட் தங்க நகைகள்ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
**இல. 70, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5526**

**சிறி மதனா நகை மாளிகை**
**தங்கப்பவுண் நகை வியாபாரம்**
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
**இல. 155 M,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 7772**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அதிகாரப்....

அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபைக்கும், உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவிச்செயலாளர் டொனால்ட் லூ, உலகளாவிய குற்றவியல் நீதிக்கான துணைச் செயலாளர் அம்பெத் வான், தேசிய பாதுகாப்புச் சபையின் இலங்கை, நேபாளம் மற்றும் மாலைதீவு ஆகியவற்றுக்கான பணிப்பாளர், செனட் அலுவலகத்தின் வெளிவிவகாரக் குழுவின் சிரேஷ்ட பணிப்பாளர் போன்ற பல முக்கியமான அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

'இலங்கையில் உள்ள நிலைமைகளை தொடர்ச்சியாக உன்னிப்பாக அமெரிக்கா கவனித்து வருகிறது. இலங்கையில் நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான ஊக்குவிப்புக்களையும் ஒத்துழைப்புக்களையும் தொடர்ச்சியாக அமெரிக்கா வழங்கி வருகின்றது' என்று அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் கால எல்லை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடையும் நிலையில், நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான சர்வதேசத்தின் கரிசனை தொடர்ச்சியாக இருக்குமா என்பது தொடர்பில் பலத்த கேள்விகள் எழுந்துள்ளன.

'அமெரிக்காவைப் பொறுத்தவரையில், இலங்கையில் நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறலை உறுதி செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது. அதற்கான அர்ப்பணிப்பான பங்களிப்பை அளிக்கின்றது. இலங்கையின் நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக இலங்கை செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் தொடர்ந்தும் நிலைநிறுத்தப்படும் என்பதை உறுதியாகக் கூற முடியும்.

இலங்கையில் தற்போது அரசியல், பொருளாதார ஸ்திரமற்ற நிலைமை காணப்படுகிறது. இந்தக் குழப்பான சூழலை ஒரு எதிர்மறையான விடயமாகக் கருதாமல் அமெரிக்கா அனைத்து இன மக்கள் மத்தியிலும் மேற்கொண்டுள்ள உரையாடல்களின் அடிப்படையில் தற்போதைய சூழலை, நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு எவ்வாறு சாதகமாகப் பயன்படுத்த முடியும் என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

தமிழ் மக்கள் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் பிரதான இடத்தைக் கொண்டுள்ளார்கள். அந்த விடயத்தில் இந்தியாவின் வகிபாகம் முக்கியமானதாக உள்ளது. இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் தேசிய இனப்பிரச்சினையின் மைய விடயமான அதிகாரப்பகிர்வு விடயத்தில் மாறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

இந்தியா தொடர்ச்சியாக அதிகாரப்பகிர்வு விடயத்தில் அரசமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறையாக்கவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட பிரதான விடயங்களில் இந்தியாவுடன் கூட்டிணைந்த செயற்பாடுகளை பரந்துபட்ட அளவில் முன்னெடுப்பதற்கு அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படும்' என்றும் அந்தச் சந்திப்பில் அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ-எ-இ)

## மல்லாவியில்...

கமலதாஸ் கபில்தாஸ் (வயது-26) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். மல்லாவி, திருநகரைச் சேர்ந்த கமலநாதன் சபேசன் என்ற இளைஞர் படுகாயமடைந்துள்ளார். இவர் மல்லாவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். முல்லைத்தீவு - மல்லாவி பிரதான வீதியில் இந்த விபத்து நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளும், சிறிய ரக வாகனமும் விபத்துக்குள்ளானதில் இரு வாகனங்களும் தீப்பற்றி எரிந்துள்ளன. மோட்டார் சைக்கிள் முற்றாகத் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகள் மல்லாவிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-இ)

## குப்பை...

கொட்டச்செல்பவர்கள் தெறித்து ஓடுகின்றார்களாம்.

யாழ்ப்பாணத்து வீதியோரங்களில் குப்பைகள் தாராளம். வீடுகளில் சேரும் குப்பைகளை பைகளில் கட்டி இரவுவேளைகளில் கொண்டுசென்று "நைஸாக" வீதியோரங்களில் கொட்டிவிட்டு வருவதில் எம்மவர்களை அடிப்பதற்கு ஆளில்லை என்றே சொல்லலாம். இவர்களின் தொல்லைகள் தாங்காது பல வீடுகளின் கேற்றுகள், சுவர்களில் இதை வாசித்தாவது ரோசம் வந்து குப்பை போடாது செல்லட்டும் என்ற நப்பாசையில் இவ்விடத்தில் குப்பை போட வேண்டாம் என்பது முதல் பற்பல வாசகங்கள் எழுதியிருப்பதைக் காணலாம். ஆனால் வீதிகளில் குப்பைகளைப் போட்டுச் செல்பவர்கள் அவை எவற்றுக்கும் அசராது தங்களின் வேலையில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலடியில் உள்ள வீடொன்றின் உரிமையாளரும் இவர்களால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பார் போல. விரக்தியடைந்து பொறுமையிழந்த அவர் எடுத்த விநோத முடிவால் இப்போது அவர் வீட்டுக்கு முன்பாக மட்டுமல்ல, அந்த வீதியில் குப்பை போடுவதற்கே பயப்படுகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அவர் வேறொன்றும் செய்யவில்லை. தனது வீட்டுக்கு முன்பாக ஒரு அறிவித்தலைத் தொங்கவிட்டு அதன் அருகில் ஒரு பொம்மை, படம் கீறப்பட்ட உலோகத் தகடு என்பவற்றை மட்டுமே தொங்கவிட்டுள்ளார். அதில் உள்ள வாசகம் தான் அனைவரையும் தெறித்து ஓட வைக்கின்றதாம்.

"சூனியம் வைக்கப்பட்டுள்ளது. வாகன விபத்து நிச்சயம் ஏற்படும். தயவு செய்து வீதிகளில் குப்பை போடவேண்டாம்" இது தான் அதில் உள்ள வாசகம். இந்த வாசகத்தை வைத்த பின்னர் அங்கு எவருமே குப்பை கொட்டுவதில்லை என்று அயலவர்கள் சொல்கிறார்கள். (அ-எ)

## தீயில்...

நிலையில். இந்தச் சம்பவம் தொடர்பாக இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 19ஆம் திகதி அளவெட்டியைச் சேர்ந்த ரெஜி நிசாந்தன் நிசாந்தினி (வயது-43) என்ற பெண் தீக்காயங்களுடன் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்தார்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக 23 வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட இளைஞர் உயிரிழந்த பெண்ணின் கணவருக்குப் பழக்கமானவர். கணவருடன் வீட்டுக்கும் வந்து செல்லும் இந்த இளைஞர் போதைக்கு அடிமையானவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

போதைப்பொருள் வாங்குவதற்காக குடும்பப் பெண்ணை அச்சுறுத்தி சில தடவைகள் அந்த இளைஞர் பணம் பெற்றுள்ளார். இந்த விடயம் கணவருக்குத் தெரியவர வீட்டுக்கு வரக்கூடாது என்று இளைஞரை எச்சரித்துள்ளார்.

இந்த நிலையிலேயே குடும்பப் பெண் எரிகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டுள்ளமை பரிசோதனையில் கண்டறியப்பட்டது. ஆயினும் அவரை எரிகாயங்களுடன் மீட்ட இடத்தில் மண்ணெண்ணெய் கலன் இருக்கவில்லை. இந்தச் சம்பவத்துக்கு போதைக்கு அடிமையான இளைஞரே காரணம் என்று உறவினர்கள் கூறுகின்றனர். சம்பவ தினத்தன்று வீட்டுக்கு அந்த இளைஞர் வந்தார் என்று அயலவர்கள் கூறுகின்றனர். அதையடுத்து அந்த இளைஞர் கைது செய்யப்பட்டார். அதேவேளை, கைது செய்யப்பட்ட இளைஞனின் கையில் தீக்காயம் உள்ளது என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இறப்பு விசாரணைகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமாரால் மேற்கொள்ளப்பட்டது. (அ-எ-26)

## தேர்தல்...

உறுப்பினர்கள் 5 பேரைத் தெரிவு செய்தது. இவர்களில் தமிழர் ஒருவரும் உள்ளடங்குகின்றார்.

ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்கவை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

முன்னாள் தேர்தல் ஆணையாளர் நாயகம் எம்.ஏ.பி.சி. பெரேரா, முன்னாள் சட்ட ஆலோசகர் ஜனாதிபதி சட்டத்தரணி தீபானி குமாரஜீவ, சட்டத்தரணி அமீர் பைஸ் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் தொடர்பான கலாநிதி ரமேஷ் ராமசாமி ஆகியோரின் பெயர்களும் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக முன்மொழியப்பட்டுள்ளன.

இவர்களது பதவிக்காலம், உரிய முன்மொழிவுகள் தொடர்பில் ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் 5 வருடங்களுக்கு நடைமுறையில் இருக்கும். (அ-எ-இ)

## ஹைஏஸ் - ...

நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. நேற்று நண்பகல் இந்த விபத்து நடந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிப் பயணித்த மினி பஸ்ஸும், கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஹைஏஸ் வாகனமுமே விபத்துக்குள்ளாகியுள்ளன. இதில் மாணவர்கள் உட்பட 9 பேர் விபத்தில் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துத் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ.159,9,20,27)

## வீதியில்...

விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இரு குழுக்கள் மோதலுக்குத் தயாராகியுள்ளன என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவு உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினர் சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

வீதியில் இரு குழுக்கள் மோதலுக்குத் தயாராக இருந்த நிலையில், ஒரு குழுவைச் சேர்ந்த ஐவரே கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றைய குழுவைச் சேர்ந்தவர்கள் தப்பியோடியுள்ளனர். அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20 தொடக்கம் 25 வயதுடையவர்கள் என்றும், அவர்களிடம் இருந்து இருவாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-எ-26)

## மக்கள்...

கள் இந்தச் சட்டங்களில் சிக்கியுள்ளமையால் அதிலிருந்து விடுபடும் வழிமுறையையே சிந்திக்கிறார்கள். மக்களின் எதிர்பார்ப்பும், ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பும் இருவிதமாக இருக்கிறன.

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவின், மெல்போர்ன் நகரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உங்கள் எதிர்பார்ப்பு என்ன? சட்டம் பாதுகாக்கப்படும் ஒரு நாடு. அந்த சட்டங்கள் நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தப்படும் நாடொன்றை எதிர்பார்க்கிறீர்கள். எனினும் ஆட்சியாளர்கள் என்ன நினைக்கிறார்கள்? சட்டத்தில் சிக்கியுள்ள அவர்கள் அதிலிருந்து விடுபடும் வழிமுறையை பார்க்கிறார்கள்.

எனினும் மக்களின் எதிர்பார்ப்பும், ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பும் இரண்டு விதமாக இருக்கிறது. எந்த திசையில் நாடு கட்டியெழுப்பப்படுகிறது எனக் கூற முடியுமா? முதலில் தொட்டில் இந்தப் பக்கம் இருக்கும். மீண்டும் 5 வருடங்களில் மறுபக்கத்துக்குச் சென்று விடும். அழகான முறையில் அந்தத் தொட்டில் அங்குமிங்கும் ஆடுகிறது.

சிலர் தொட்டில் ஆடும்போது அதில் ஏறி மறுபுறம் வருகின்றனர். எவரும் இறங்குவதில்லை. தற்போது தொட்டில் இடையே சிக்குண்டுள்ளது. அதனால் அதைத் தடுப்பதற்கான அனைத்து விடயங்களையும் அவர்கள் மேற்கொள்கின்றனர் - என்றார். (அ-எ-இ)

## இலங்கையுடனான...

அலி சப்ரியை நேற்று அவர் பீஜிங்கில் சந்தித்தார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகப் பொருளாதார மாநாடு மற்றும் இரு தரப்புச் சந்திப்புக்களுக்காக அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழு சீனா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

சண்டிலிப்பாய், சுன்னாக பிரதேசத்தில் இயங்கும் நிறுவனத்துக்கு வரவேற்பாளர், கணினி தரவு பதியுனர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

(பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்)

WhatsApp BIO DATA 077 99 062 99


# துறைசார் தொழிலில் ஈடுபடுவோர் வரிகோவையை ஆரம்பிக்க பணிப்பு

துறைசார் தொழிலில் ஈடுபடும் அனைவரும் இம்மாதம் முதல் இறைவரித் திணைக்களத்தில் தமக்கான வரிக்கோவையை ஆரம்பிக்க வேண்டுமென வர்த்தமானி மூலம் அரசு அறிவித்துள்ளது.

சட்டத்தரணிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், வங்கியாளர்கள், நில அளவையாளர்கள், பட வரைஞர்கள் அனைவரும் இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்து தமக்கான வரி அடையாள இலக்கத்தைப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின்படி மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபா சம்பளம் பெறுவோர் அனைவரும் தமக்கான வரி அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள், லாண்ட் மாஸ்டர் தவிர்ந்த வாகனங்களை பிரதேச செயலகங்களில் பதிவு செய்திருப்போரும் தமக்கான வரி அடையாள இலக்கத்தைப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசையாத சொத்துக்கள் கொள்வனவு விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோரும் வரி செலுத்துவோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். மாதந்த 2 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை ஊழியர் சேமலாப நிதியாக செலுத்துவோரும் வரி செலுத்துவோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (எ-6)


## வேலைவாய்ப்பு

- ✓ தமிழ் ஆசிரியர்
- ✓ ஆங்கில ஆசிரியர்
- ✓ சிங்களம் எழுத்துப் பயிற்சி எழுதக் கூடிய ஆசிரியர்
- ✓ கணக்காளர்
- ✓ முன்பள்ளி தொடக்கம் தரம் - 3 வரை கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள்

### Work Opportunity

**English Teachers (1 Year or 2 Year Contract)**
**Salary 20,000/=, 30,000/= Permonth**

நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி :- 27.06.2023 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை

நேர்முகத் தேர்வுக்குரிய இடம் :-
**Little Masters Montesoori** கே.கே.எஸ் றோட், சிவபதி, இணுவில் (இணுவில் மத்திய கல்லூரிக்கு அருகில்)
**T.P: 077 377 0524** (CS/25330)AH-

## காணி விற்பனைக்கு

புத்தூர் மீசாலை வீதியில் வேம்பிராய் சந்தியி லிருந்து 100m தூரத்தில் 19 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் இல்லை.

Phone No. 077 924 0502
Email - gunavathanyk@gmail.com

## வீடு, காணி விற்பனைக்கு உண்டு

கோப்பாய் இராச வீதிக்கு அண்மையில் புதிய வீடும், 3 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. மற்றும் பலாலி றோட், ஊரெழு அம்மன் கோயில் (திலீபன்) வீதிக்கு அண்மையில் 28 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 1933 490

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- * பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- * புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
- * மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- * வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
- * பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
- * நன்னீரூற்று.
- * ஒரு பரப்பின் விலை **200,000/=** ( இரண்டு லட்சம்) மட்டும்.

**தொடர்பு: 076 733 6047,076 7558 606 076 9119 371**

## உடனடி வேலைவாய்ப்புகள்

- ➤ **Accounts Clerk** 3 வருட அனுபவமுள்ள பெண் ஊழியர் தேவை.
- ➤ **Typesetter** (தமிழ், ஆங்கிலம்) 3 வருட அனுபவமுள்ள ஆண்/ பெண்.
- ➤ **Sales & Marketing** முன்னனுபவமுள்ள ஆண் ஊழியர் தேவை.

**K.V. Printers Books Distributing Centre**
386, Clock tower road, Jaffna.
075 878 2924, 021 720 0237, 077 878 2924
(CS/25326)AH-1

## மின்சார தராசுவகைகள் விற்பனைக்கு

அரச அங்கீகார முத்திரை இடப்பட்ட நிறுவை தராசுவகைகள்
**15 K, 30 K, 150 K, 300 K, 1000 K**
அனைத்து தராசுவகைகள் ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு

**நந்தலாலா இரும்பகம்**
29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 6234, 077 780 5950


# மரண அறிவித்தல்

## ஜெயலட்சுமி அம்மா செல்வரத்தினம்

(நீர்வேலி தெற்கு, வீரபத்திரர் பேச்சி அம்மன் ஆலய ஆதீன கர்த்தா)



தோற்றம் 13.03.1935 மறைவு 18.06.2023

யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயலட்சுமி அம்மா செல்வரத்தினம் கடந்த (18-06-2023) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிமுத்து நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிமுத்து செல்வரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சுபேஸ்குமார், சுவர்ணலதா, சுபத்திரா, ரமேஸ்குமார், நந்தகுமார், ஜெயக்குமார், செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பராசக்தி (சூட்டி), சுரேந்திரா, குணநிதி, ஜெயந்தி, சொருபகாந்தி (சோபி), துஷாந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், குணசீலன், ஜெகதீஸ்வரி, ஜெயசீலன், ரதிஸ்வரி, தயாசீலன், நந்தினி, சாந்தினி, காலஞ்சென்ற காந்தரஞ்சன் ஆகியோரின் ஆசையம்மாவும்,

காலஞ்சென்றவர்களான பரமசாமி வைரமுத்து, கனகரத்தினம் அம்மா கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து ஆனந்தவேல், இராசம்மா சிவலிங்கம் மற்றும் தம்பிமுத்து சோதிலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், விதுரன், பிரிந்தன், சாயி, சாரா, சயித், டிலானி, ஜெகனி, தனுசன், ஜெனனி, ஜெஸ்னா, ஜெசிக்கா, அஞ்சலி, நவீன், பிரித்திக்கா, லக்சிகா, தரன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், மேசன் நிஷாந்தன் அவர்களின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2023) திங்கட்கிழமை 12.30 Pm. 3.00 pm லண்டனில் Jack Carter Pavilion Oakfield Playing Fields Fairlop, Fencepiece Rd, Ilford IG6 2JL, United Kingdom என்னும் இடத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் பிற்பகல் 3.45 - 4 . 30 மணியளவில் City of London Cemetery & Crematorium Aldersbrook Rd, London E12 5DQ, UK எனும் இடத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரம் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| சுபேஸ்குமார் | - மகன் | - Mobile : +447 9492 34935 |
| நந்தகுமார் | - மகன் | - Mobile : +447 9563 07338 |
| ரமேஸ்குமார் | - மகன் | - Mobile : +141 6887 7527 |
| ஜெயக்குமார் | - மகன் | - Mobile : +447 5615 77491 |
| செல்வகுமார் | - மகன் | - Mobile : +447 9005 63385 |
| சுவர்ணலதா | - மகள் | - Mobile : +447 9159 09321 |
| சுபத்திரா | - மகள் | - Mobile : +447 4360 09689 |

(cs.50992) (N-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.